Registered No. M. 1789.

தமிழ் வைத்தியம்

தொகுதி—1 பகுதி எண் 2

1924 மேயீ கலியாண்டு ௫௦௨௫ வைகாசீ

இது தமிழ் வைத்திய சங்கத்தினின்று வெளிவரும்
திங்கட்புதினத்தாள்.

தலைவர்,
சாமி, விருதை, சிவஞானயோகிகள்,
தமிழ் வைத்திய சங்க அமைச்சர், தமிழ்ப் பிரம்ம சூத்திராசிரியர்,
கோவிற்பட்டி.

பொருளட்டவணை

1.	மருத்துவம்	33—40
2.	தமிழ்மொழி வரலாறு	41—43
3.	அறுவை மருத்துவம்	43—46
4.	பாம்புகடிக்கு மருந்து	46—47
5.	மூலிகைகள் 1008	47—50
6.	தமிழ் வைத்திய சங்க வேண்டுகோள்	51—57
7.	தமிழ் வைத்தியசங்க [illegible]வது மகா நாட்டறிக்கை	57—64

சந்தா

தமிழ் வைத்தியசங்க உறுப்பினர்க்குப் புதினத்தாட்சந்தா ஆண்டு1-க்கு 1—8—0

தமிழ் வைத்திய சங்க உறுப்பினர் சந்தா ஆண்டு 1-க்கு 3—0—0

சங்க உறுப்பினரல்லார்க்கு புதினத் தாட்சந்தா 3—0—0

அயல் நாட்டாருக்குப் புதினத்தாட் சந்தா 3—12—0

தனிப்பகுதி 1-க்கு 0—6—0

முன்னரே சந்தா அனுப்பவேண்டும். அனுப்பாதவர்களுக்கடுத்த பகுதி வி. பி. யிலனுப்பப்படும்.

விளம்பரங்களுக்குத் தொகை கால் பக்கத்துக்கு ரூ. 1—8—0 இ. பக்கத்துக்கு ரூ. 4—0—0 ஒரு பக்கத்துக்கு [illegible] பக்கத்துக்கு ரூ. 8—0—0 அதிக நாள் விளம்பரங்களுக்கெழுதித் தெரிந்துகொள்க.

கடிதங்களும் மணியார்டர்களும் படைப்புகளும் சாமி, விருதை, சிவஞானயோகிகள் தமிழ் வைத்திய சங்கத்தலைவர், சங்க அமைச்சர், கோவிற்பட்டி என்ற விலாசத்துக்கனுப்பவேண்டும்.

தமிழ் வைத்திய சங்க மருந்துகள்

1. பூபதி செந்தூரம்:—12 புட்டி வாங்குகிறவர்களுக்கு ஒரு புட்டி இனாம் கொடுக்கப்படும். 6 புட்டிக்கு அணா 12 கமிஷன் கொடுக்கப்படும். சுரம், சன்னி, வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, வாந்தி, அஜீரணம், மகாமாரி (பிளேக்) க்ஷயம், இருமிரைப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், க்ஷயம், பாண்டுரோகம், வாதம், உடல்வலி, பொருமல், சளி (சலதோஷம்) அண்டவாயு, தசைபண்டவாயு, சூதகவாயு, பக்கவாதம், முதலிய நோய்களுக்கும் பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களுக்கும், அவர்களுக்கு நோய் வாராமற் காத்தற்கும், குழந்தைகளுக்குண்டாகும் மாந்தங்கள், தோடங்கள், சுரம், சன்னி, மாந்தசன்னி, சளி, இருமல், கக்கல், பிரிவு, கழிச்சல், வாந்தி, அஜீரணம், இளைப்பு முதலிய நோய்களுக்குங் கைகண்ட மருந்து.

2. ஜீரண சஞ்சீவி லேகியம்:—சேர் ஒன்றுக்கு ரூ. 3—8—0 காலை, மாலை 2 சுண்டைக்காயளவு கொள்க; குன்மம், அஜீரணம், பொருமல், மந்தம், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, புளியேப்பம், வாயு, அதிசாரம், முதலியவற்றைத் தீர்ப்பதில் கைகண்ட மருந்து. அதிக பசியும், இரத்த விர்த்தியும் உண்டாம். பொருமல் செரியாமை அதிகமிருந்தால் அன்னமுண்ட பின்னரும் ஒரு தடவை லேகியங் கொள்க. நாட்பட்ட குன்மங்களையும் ஒரு மண்டலத்தில் குணப்படுத்தும் சீரணமில்லாதவர்களுக்கு சீரணத்தையும் பசியில்லாதவர்களுக்கு பசியுமுண்டாக்கும். நாட்பட்ட அஜீரண ரோகங்களுக்கு இதைக் காட்டிலும் உறுதியான நல்ல மருந்து வேறு கிடையாது.

3. கபகுடோரித் தைலம்:—டின் 1-க்கு ரூ. 2—0—0 இருமல் (க்ஷயம்) இரைப்பு (காசம்) மகாசுவாசகாசம் முதலிய கபநோய்களனைத்தும் போம், மந்தம், மலக்கட்டுகளும் நீங்கும் பத்தியமில்லை.

4. மேகராஜ மெழுகு:—சேர் 1-க்கு ரூ. 5—0—0 பத்து, படை மேகப்புண், சொறிசிரங்கு, சூலை, பக்கவாதம், இயிர்வாதம், குஷ்டம், சொறிகுஷ்டம், வெடிப்பு, தடிப்பு முதலிய மேக நோய்கள் நீங்கும், வலுவின்மை நீங்கிப் பசியும் தாது புஷ்டியும், ரத்த விர்த்தியுமுண்டாகும் மூளையிற் பலமும் ஞாபகசக்தியும் பெருகும். பத்தியமில்லை.

5. குஷ்டராக்ஷச தைலம்:—எல்லாவித குஷ்ட நோய்களும் நீங்கும் புட்டி 1-க்கு ரூ. 5 வேண்டியவர்களுக்கு வி. பி. அனுப்பப்படும்.

வி. சிவஞான யோகி,
சங்க அமைச்சர்,
கோவில்பட்டி.

உ

சிவமுதற் றுருதுணை

தமிழ் வைத்தியம்

தமிழ் வைத்திய சங்கத்தினின்று வெளிவரும்
திங்கட் புதினத்தாள்

தொகுதி I	மேமீ—1924 கலியாண்டு 5026-வைகாசிமீ	பகுதி எண் உ

மருத்துவம் (20-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் 12000 ஆண்டுகட்கு முற்பட்டுத தோன்றிய முதற்கழகம் அதனபின் நிலவிய இடைக்கழகம் கடைக்கழகங்களில் வளர்ந்தது. பிற்பட்ட காலத்தில் அயல் நாட்டினர் வந்து குடியேறியதால் தமிழ் மொழிகளை அவர்கள் எற்று அவ்வம் மொழிகளினியற்கைக் குரிய விகாரங்களை (வேற்றுமைகளை) யேற்றி வழங்கினர். அவர் மொழிகளும் சிறுகித் தமிழுல் வந்தேறி வழங்கத் தொடங்கின. ஆனல் அயல்நாட்டா ரிங்கு குடியேறுதற்கு நெடுநாள் முன்னமே இவண் இயல் இசை நாடகம் மருந்து வாதம் யோகம் கற்பம் ஞானம் முதலிய நூல்கள் நிறைந்திருந்தன. அவ்வுண்மையை

திருமந்திரம்

"அவிழு மனமு மாதியறிவுந்
தமிழ்மண்டல மைந்துந் தத்துவமாமே"

"தமிழ்ச்சாத்திரம் பொங்கிமிகாமை வைத்தான் பொரு
"சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேதம்" [டானுமே'

"சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்தமன முந்தமிழ் கொண்டோர்

நித்தர் நிமலர் நிராமயர் நீள்பா
முத்தர்த முத்தி முதல முப்பத்தாரே"

திருப்புகழ்

"சகலவேத சாமுத்ரியங்கள், சமயமாறு லோகத்திரயங்
தரும நீதி சேர் தத்துவங்கள் தவயோகம், [கள்,
தவறிலாமலாளப் பிறந்ததமிழ் செய்மாறர் கூன்வெப்பொ
தவிர ஆலவாயிற் சிறந்த பெருமாளே." [டன்று

சம். தே. திருமுதுகுன்றம்

"அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொரு ளின்பம் வீடு,
மொழிந்தவாயான்"

அப். தே. திருப்பழனம்

"தூய நான்மறை கணுன்கும் பாடினுரொருவர்போலும்"

கல்லாடம்

"தெய்வ மறைத்த செழுந்தமிழ்ப் பாடலும்"
முதலிய திருமொழிகள் நன்கு விளக்குகின்றன.

புத்தர் இந்தியா (Buddist India P. 156)

"நமது 2-வது நம்பரிற்பட்ட வேதபாஷை (வடமொழி இருக்கு முதலிய வேதங்களின் பாஷை) ஒலிகள், சொற்கள், ஆகிய இரண்டும் மிகவும் திராவிட பாஷையின் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கின்றன. ஆரிய சம்பந்தமான பேச்சு வழக்குள்ள நாட்டு மொழிகள் முழுவதும் பாலி சமஸ்கிருதம் பிராகிருத பாஷைகளின் கல்வி சம்பந்தமான எல்லாச் சொற்களின் வடிவங்களும், இந்தியாவிலுள்ள பல ஆரிய ஜனங்கள் பரம் பரையிலும் இரத்தக் கலப்பிலும் ஆரியரல்லாத திராவிடரோடு எவ்வளவு அதிகமாய்க் கலந்திருக்கிறார்களோ அவ்வளவு அதிகம் திராவிடமொழிகள் கலந்து சேர்ந்திருக்கின்றன. அதாவது அதிக அளவு வந்து சேர்ந்திருக்கிறது என்பது கருத்து." (1)

---

(1) Buddist India P. 156. Our No 2 Vedic is largly subject to Dravidian influence, both in phonetics and in Vocabulary. The Aryan Vernaculars throughout and all the literary forms of speech, Pali, Sanskrit and, Prakrit are charged with it in a

என்று விளக்குகிறது. ரோமேஷ் சந்திரடட் சி. ஐ. இ. எழுதிய பழைய இந்தியநாகரீகம் (civilization in ancient India) என்ற நூலில் பக்கம் 5 "விலைமதிக்கப்படாத புத்தகமாகிய இருக்குவேதத்தில் இந்த ஆரியர்களை சிந்து நதியின் கரையிலும் அதன் ஐந்து கிளைகளிலுமே வென்றவர்களாகவும் குடியேறியவர்களாகவும் அறிகின்றோம். அவர்கள் சட்லிஜ் நதிக்கப்பாலுள்ள இந்தியாவை அநேகமாய்த் தெரியாமலிருந்தார்கள். பக்கம் 6 இருக்கு வேதத்திற் கண்டபடி பஞ்சாப்பில் ஆரியர் குடியேறிய காலத்தின் கணக்கென்ன? (ஆரிய) இந்தியரின் சரித்திரத்தின் முதற்காலம் கி. மு. 2000 முதல் 1400 வரை என்று பொது அபிப்பிராயத்துடன் நாம் நினைக்கிறோம். ஒப்புகிறோம்". என்று ஆரியர் வட இந்தியாவிற் குடியேறியதும், தென்னிந்தியாவை யறியாதிருந்ததுமாகிய காலங் குறிக்கப்படுகின்றது. சிலவாயிரவாண்டுகளுக்கு முந்தி வந்தனர் என்று கூறுவாருமுளர். இருக்குவேதம் 10-22-8 "நாங்கள் எல்லாப் பக்கங்களிலும் தசியூப்பகுப்பாரால் சூழப்பட்டிருக்கிறோம். அவர்கள் ஒன்றையும் நம்புவதில்லை. அவர்கள் சடங்குகள் (கிரியைகள்) வேறு. அவர்கள் மனிதரல்ல, பகைவரை அழிப்பவரே அவர்களைக் கொல்லும், தசியூகுலத்தை அழித்து விடும்."

சாமவேதம் 1, 2. 1. 1. 10. "ஒ வீரனாகிய அக்கினியே மனிதரின் தலைவனே, எங்கள் புதிய இடத்தைக் கேட்டு அதன்மேல் உனது தீயால் மந்திரவாதிகளான ராக்கதர்களைக் கொழுத்து"

என்றிவ்வாறு இருக்கு சாமவேதங்களில் திராவிடர் கருநிறத்தரென்றும் ஆரியர் வெண்ணிறத்தவரென்றும், ஆரியர் திராவிடராகிய தசியூக்களின், கோட்டைகள், பணிகள், தேர் யானை குதிரை விலங்களைக் கொள்ளைகொண்டு வெற்றியடைந்த விபரங்களும் பல விடங்களிற் கூறப்படுகின்றன. ஆதலால் தமிழ் நாட்டில் தமிழில் பல நூல்களும் அவ்வந்நூலுக்குரிய சொற்களும் இருந்தனவென்றும், பின்வந்து குடியேறிய ஆரியர் தமிழ் மொழிகளைத் திரித்து வழங்கினவென்றும் புலப்படுகின்றது.

வடமொழி வியாகரண மகா பாடியத்திலும்—

"சம்ஸ்கிருத்ய சம்ஸ்கிருத்யபதா நிப்ரயுஜ்யந்தே" "நன்றாக்கி நன்றாக்கிச் சொற்கள் உபயோகிக்கப்படுகின்றன" என்று குறிக்கப்பட்டுளது. அதனானே அம்மொழி சம்ஸ்கிருதம் என்றழைக்கப்படுகின்றது.

வட மொழிக்குரிய வழியில் தோன்றல் திரிதல் கெடுதல் விகாரங்களைச் செய்தலை நன்றாக்கல் என்று கூறினர். வடமொழியார் தமிழ்

---

degree no less than that in which the descent and the blood relationships of many people of India are charged with non-aryan elements—and that is saying a great deal.

முதலிய வழக்கு மொழிகளைப் பிராகிருத மென்கின்றனர். ஆதலால் தமிழ் இயற்கை மொழி வடசொல் செயற்கை மொழி. இயற்கை மொழிச் சொற்களே செயற்கை மொழியிற் சார்வதியல்பு.

திருமந்திரம் 600

குறியாம் வலக்காங் குவிந்த பெருவிரல்
மறிவாய தன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறிவாய்மே லேறிப் பிலத்தது வாதமாம்
அறிவாய் நடுவிரல் அமர்ந்தது பித்தமே 24

பித்தத்தின் கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப் பார்க்க ஓர் நாம்பே யோடும்
பத்தித்து மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம் போல் வழங்கும் நாம்பிதே

தங்கியவாயு சமத்தன் மகரவாதம்
பங்கிய வன்னியாற் பகுந்தது பித்தமே
பகுந்த சலத்திற் பரிசிக்கும் நல்லையம்
வகுந்த விம்மூன்றால் வளர்ந்தது நோயெல்லாம் 45

திருமந்திரம் 8000

திரண்டுடலாகச் செய்வந்து வாதம்
அருந்துவ பிய்க்கு மழ லொண்பித்தம்
கருமெய் தழைக்கக் கவ்வு நீர்கவணும்
உரையிம் மூன்று முடனிலைத் திடுமே

வாதம்—உயிர்ப்புண்டாதல், செந்நீர் ஓடல் எழுதாதுக்கள் சமைதல் பொறி புலன் றொழிற்படல்களுக்குக் காரணமாவது வாதம் = வா + த் + அம், வா பகுதி (வருதல்) த் எழுத்துப்பேர் அம்—தொழிற் பெயர் விகுதி. பித்தம் = பி = பகுதி (பிய்த்தல்) த்த் + அம் உண்ணும் உணவைப்பிய்த்தல் = செரிக்கச் செய்தல்

கவண் = கவ் + அண், தாதுப் பொருள்களும் அணுக்களும் ஒன்றையொன்று கவ்வி அண்ணும் (பொருந்தும்)படி செய்வது கவண் = ஐயம் ஆதலால் வாதம், பித்தம், கவண் (ஐயம்) என்பன தமிழ்ச் சொற்கள்.

வடமொழியிலும், வாதம், பித்தம், கபம் என்ற சொற்கள் வழங்குகின்றன. வடமொழியில் வைத்திய முதனூல்களாகிய சரகம் சுசுருதங்களில் எண்வகைத் தேர்வும் அதில நாடிபார்த்தலைப்பற்றியும் விளக்கப்

பட்டில்லை. வடமொழியார் தமிழினின்றுகொண்ட சொற்களுக்குப் பொருள் விரிக்கும் வகையை ஆராய்வாம்.

வாத: = (வாதம்) லிங்காபட்டீயம் = வாதி கந்தநயோ: வா என்ற பகுதி செல்லல், கொல்லல் என்ற பொருளில் வரும். வா = செல்லல். தமிழில் வருதல் என்ற பொருளில் வருகிறது வந்து என்பது வாயுவுக்குப் பெயர்.

பித்தம் = லிங்காபட்டீயம், பதீதி பித்தம் = பதில் கதௌ (gadhove) பத் என்ற பகுதிக்கு விழுதல் (செல்லல்) என்பது பொருள், திரவ ரூபமாக (பதி) விழுகிறது. பித்தம் என்ற சொல்லுக்கு பத் என்ற பகுதியைக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்.

கபம் = கேசிரசி. கேசஜலே கவா பலதி (Phalathi) சிரசிலாவது நீரிலாவது உண்டாவது க = தலை அல்லது நீரில், பலதி உண்டாவது—கபல: என்பதில் லகாரம் கெட்டு கப: என்றாயிற்று என்கிறார். எப்படியாவது சரிப்படுத்தப் பார்க்கிறார். சொல் கபல: என்றிருந்தாலொருவாறொப்பலாம். கப: என்றிருக்கிறது ஆதலால் பொருந்தாது. பானுதீக்ஷிதர் கேசிரசிபணதிபக்கதிவா = தலையில் நகர்கிறது, அல்லது மெதுவாய் நகர்கிறது என்றாவது என்கிறார். அப்பொழுது கபண: கபக: என்றாம்.

நாடி—3

இடைகலை = (இடை) இடதுபக்கத்து மூக்குத் துளையில் வரும் உயிர்ப்புக்கலை

பின்கலை = இடதுபக்கத்துக் கெதிரான வலப்பக்க உயிர்ப்புக்கலை.

சுழிமுனை = மூக்குண்முனையில் சுழித்திருபக்கமும் வரும உயிர்ப்பு.

இவை தமிழ்ச்சொற்கள் பொருளோடு நன்கு பொருந்தியிருத்தல் தெளிவு.

வடமொழியில் இடா, Edha பிங்கலா, Pingala சுசும்னா Sushumna: இம் மூன்று நாடிகளின் பெயர்களில் கி. பி. 500ல் செய்யப்பட்ட வடமொழி அமரசிம்மன் நிகண்டில் இடா, பிங்கலா, என்ற சொற்கள் வேறு பொருளிற் கூறப்பட்டுள்ளன. சுசும்ந: என்ற சொல் கூறப்படவேயில்லை. அதனால் அதனபின்னர்த் தான் வடவர் தமிழ் நூல்களிலிருந்து அத் தமிழ்ச் சொற்களை எற்றுண்டிருக்கின்றனா என்று விளங்குகின்றது.

இனி நவீனகாலத்தி லெழுதப்பட்ட சப்த கல்பத்ருமமென்ற வடசொல் லகராதியில் இடா: (இடை) 'சரீரஸ்யவாமபார்ஸ்வ நாடீ இதி ஹேம சந்திர: (உடலின் இடதுபக்க நாடி என்று ஏமசந்திரன்) என்று கூறப்பட்டுள்ளது ஆங்கும் இடதுபக்கத்தது என்றது தமிழ்ப்பகுதிப் பொருள் என்பது தெளிவு.

பிங்கலா—சப்த கல்பதரு மத்தில் 'தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதா. (தென்பக்கத்தைச்சப்பற்றி யிருப்பது) எனப்படுகின்றது. அதுவும் பின்கலை என்ற தமிழ்ச்சொற்பொருளையே தழுவுகிறது சுஷும்னா (Sushumna) இத்யவ்யக்த சப்தம் ம்நாயதீதி விளங்காத சொல் நினைக்கின்றனன் என்று பொருத்தமில்லாத பொருள் விரிக்கப்படுகிறது. வடமொழியில் அதற்குரிய பகுதியின்மையால் விளங்காதசொல் எனப்பட்டது. அம்மூன்று சொற்களும் வடமொழிச் சொற்களாயிருக்கில் அமரசிம்மனெடுத்துரைத்திருப்பன். வடமொழியிற் றெளிவான பகுதிகளினடியாய்ப் பிறந்த சொற்களாயுமிருக்கும். அங்ஙனமின்று.

சுக்கு, திப்பிலி, மிளகு என்பன மூக்கடுகம், மூன்று கார்ப்பு மருந்துகள் (திரிகடுகு)

1. சுக்கு—சுண்டி என்ற சொற்கள் நீர் சுருங்கிய அல்லது சுண்டிய இஞ்சிக்குப் பெயர்கள். சுப்பி, சுப்பல், சுள்ளி (நீர் சுருங்கிய சிறுகிளை) முதலியவற்றிற்போல சுருங்கு என்பது ருகரம் கெட்டு வலித்தல் விகாரம் பெற்று சுக்கு என்று நின்றது. சுண்டு + இ = சுண்டி = இகரம் வினைமுதற்பொருளை யுணர்த்தும் விகுதி. வடமொழியார் சுடீ (Suthee) சோஷணே சுடீ என்ற பகுதி உலர்தற்பொருளில் என்கின்றனர்.

2. திப்பிலி — திப்பி + இல்லி = திப்பி = சக்கை — இல்லி இல்லாதது, சக்கையின்றி விதைகள் ஒருவகைப் பசையால் ஒட்டியிருக்கிறது. அதலால் திப்பிலி எனப்படுகின்றது. வடமொழியார் பிப்பலி = ப்ருபால நபூரணயோ: ப்ரு என்ற பகுதி காத்தல் நிறைத்தல் என்ற பொருளில் வரும் ஆகலால் ப்ரு என்ற பகுதி பிபர்த்தி என்றாகி காத்தற் பொருளில் பிப்பலி என்றாய தாய்ப்பொருந்த்ராவிகாரங் கூறுகின்றனர்.

மிளகு — மிள = கார்ப்பு, கு = பண்புப்பெயர் விகுதி, மிள = காரம்

மிளகாய் — மிளப்பு (கிராம்பு) மிளகாணை (கார்க்கின்ற ஆணைப் பூண்டு).

வடமொழியார் — ம்ருங்பிராணத்யாகே, ம்ருங், என்ற பகுதி உயிர்விடுதல் (சாதல்) பொருளில் வரும் = நாவின் நுனி இதனாற் பாதிக்கப்படுகிறது என்று (ம்ரியதே) சாதல் என்ற பொருளுடைய ம்ருங், பகுதியினின்றும் மரீச என்ற சொல் தோன்றியது என்கின்றனர். பொருந்தாப்பகுதியிற் றோன்றியதாயிதுவுங் கூறப்படுகின்றது உயிரைக் காக்கும் மிளகுக்கு உயிரைப்போக்கும் ம்ருஙபகுதியினின்று வந்ததாய்க் கூறுவது கொள்ளத்தக்கதன்று.

இம்முச் சொற்களும் தமிழ்க்கிளைமொழி (திராவிடமொழி) களாகிய, தெலுங்கு, கன்னடம், மராட்டி, குஜராதி, மொழிகளிலும — ஆரிய மொழியாகிய சம்ஸ்கிருதம், சமஸ்கிருதக் கிளைமொழிகளிலும் சிதைந்து விகாரப்பட்டு வரும வகையைக் காட்டுதும்.

சுக்கு

சமஸ்கிருதம்	—சுண்டீ	கர்நாடகம்	—சுண்டி
ஹிந்தீ	—சுண்டீ	தெலுங்கு	—சொண்டீ
வங்காளி	—சுண்ட	ஆங்கிலம்	—Dry ginger
மராட்டி	—சுண்ட்ட	பார்சி	—ஜஞ்ஜபீல
குஜராதி	—சுண்ட்ய		

திப்பிலி

சமஸ்கிருதம் .	—பிப்பலீ	தெலுங்கு	—பிப்பலு
ஹிந்தி	—பீபல, பீபா	ஆங்கிலம்	—Long pepper
வங்காலி	—பிபுல	லாட்டின்	—Piper Langue
மராட்டி	—பிம்பலீ	பார்சி	—பிலபில, தாஜ
குஜராதி	—விண்டிபீபல	அரபி	—பிலு டாரபில
கர்நாடகம்	—ஹிப்பலி		

மிளகு

சமஸ்கிருதம்	—மரீச, சிதமரிச	கன்னடகம்	—மெணசு-விலேய மெணசு
ஹிந்தி	—காலீமிரச, தட்சிணீ [மிரச	தெலுங்கு	—மரியா, மிரியா
வங்கம்	—மரீச, கௌலமரீச	ஆங்கிலம்	—Black peper
மராட்டி	—மிரேம் பாண்டரேம்	லாட்டின்	—Piper Nigram
குஜராதி	—மரீ [மிரீம்	பார்சி	—பிலபிலே அஸ்வத்
		அரபி	—பிலபிலே அஸீத்

முத்து =(முற்றியது) முக்தா
பவளம்=(பவ்=பவ்வம்+வளம்) ப்ரவாளம்
படிகம்=(உருவம் படிவது) ஸ்பாடிகம
மண்டூரம்=(மண் + தூர் + அம) மண்டூரம்
செந்தூரம்=(செம் + தூர் + அம்) சிந்தூர:
நாகம்=(நாகு=அழகு+ அம்) நாகம்
சடைமஞ்சி=ஜடாமாம்சி
தரு (இலை, பூ, காய், பழம், சாறு தருவது) தரு
வள்ளி=(கொடி) வல்லி ளகரமின்மையால்
புன்னை=புந்நாக:

ஙகோலம்	—அங்கோல:	நீலி	—நீலீ
பலா	—பலாச	செவியம்	—சவ்யம்
வஞ்சி	—வஞ்ஜுல:	குன்றி	—குஞ்ஜா
வில்வம்	—பில்வ:	அம்பட்டன்	—அம்பஷ்ட
பாதிரி	—பாடலி	குட்டம்	—குஷ்ட:
செண்பகம்	—சம்பகம்	விட்டை	—விஷ்டா
மகிழமரம்	—வகுள:	காலம்	—கால:
மல்லிகை	—மலலிகா	பட்டினம்	—பத்தந:
ஊமத்து	—உந்மத்த:	அமையம்	—சமய:
மாதுளை	—மாதுலங்க:	விக்கல்	—ஹிக்கா
எருக்கு	—அர்க்க:		

தாயாதி (தாயை ஆதியாய்க்கொண்டது) தாயாத:
ஆரம் (ஆரக்கால்) ஆர:
ஆணி (ஆணச்செய்வது) ஆணி:
அச்சு—அக்ஷ:
கருப்பம்—கர்ப்ப—garbha

இவற்றைப்போல் ஆயிரக்கணக்கான சொற்களும் பகுதிகளும் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றிருக்கின்றன. ஆரியர் இந்நாட்டுக்கு வருதற்கு நெடுநாள் முன்னரே தமிழர் தமிழ்மொழியும் நூல்களும் மருத்துவம் அறம் பொருளின்பம் வீடு முதலியன கூறும் 'உண்மை நூல்களும் உடையராயிருந்தனர். இருக்கு சாமம் ஆகிய வேதங்களிலேயே, தசியு, சூரியா முதலிய பெயர்களால ஆரியர் அழைக்கும திராவிடர். கரிய நிறத்தர் கபில நிறத்தினா ஆரியர் வெண்ணிறத்தர். இந்நாட்டுக்குப புதிதாய்வந்தவர் என்றும் ஆரியர் பசுவைக்கொன்று செய்யும் வேள்விகளைத திராவிடர் வெறுததனர், அவை கூறும் நூல்களை வெறுத்தனா, என்றும் திராவிடர் வேறு கிரியையுடையர். மந்திரஙகளில வல்லவர். கோட்டைகள், சேனைகள், பணிகளுடையவராயும், ஆட்சியுடையராயுமிருந்தனர். என்றும்கூறப் படலால் ஆரியர் வருமுன் தமிழில் பொருட் பெயர்களும் நூல்களும, நூலில் வழங்கும சொற்களும் இருந்தனவென்பது வெளிப்படை. ஆதலால் ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிற்பட்டுவந்து குடியேறிய ஆரியரிடத்திலிருந்து திராவிடர் படித்துக்கொண்டனரென்று கூறும கூற்று எள்ளத்தக்கது. முந்திய தமிழ்ச்சொற்களின் ஒலி வடிவஙகளுடைய மொழிகள் ஆரியபாடையிற் காணப்படில அவை திராவிடத்திலிருந்து சென்றனவென்று கொள்ளத்தக்கது. அல்லது மக்கள் முதற்கண்டோன்றிய தமிழகத்திருந்து ஆரியர் வெளியேறும்பொழுது கொண்டுசென்ற சொற்களென்று கருதத்தக்கதாம். (இன்னும் வரும்)

தமிழ்மொழி வரலாறு

21-ம் பக்கத்தொடர்ச்சி

1. புலவர்ஹேக்கெல்—இந்துமாக்கடல் சந்தாத் தீவுகளிலிருந்து ஆசியாக்கரைவழியாய் ஆபிரிக்காக் கரைவரை ஒரு கண்டமாக அமைந்திருந்தது. இந்தப் பெரிய கண்டம் மக்களினந் தோன்றிய விடமாயிருக்கும் பெரிய சிறப்பையுடையதாயிருக்கிறது.

2. மக்கணூல்—ஆஸ்திரேலியா. "புதிய ஆராய்ச்சிகளால் மக்களினம் முதலிற்றோன்றிய இடம் இப்பொழுது இந்துமாகடலில் மூழ்கியிருக்கும் நிலமாயிருக்குமென்று தோன்றுகின்றது.

12000 ஆண்டுகட்குமுன் பல்லாயிரவாண்டுகளின் முன்னர்த் தமிழகத்திற்றோன்றிய மக்கள் காலஞ் செல்லச்செல்லப் பல்கிப் பெருகி ஐந்திணை மாக்களாகிப் பின்னர் மருதஞ்சார்ந்தபுரிகள் அமைத்து தெய்வ வணக்கத்துக்குரிய நிலயங்களும் தளிகளும் அரசபுரிகளும் அமைத்துப் பலகலைகளையும வளர்த்துச் சிறப்படைந்தனர். முற்காலத்தில் குச்சில்களும சிற்றில்களும் மண் வீடுகளும மண்டளிகளும் அமைத்து வாழ்ந்து பின்னர் மர வீடுகளும் அதன பின்னர்ச் சுண்ண வீடுகளும் அமைத்துத் தேர்ந்து பின்னர்க் கல்வீடுகளை கட்டப்பழகிச் சிறப்புற்றனர். இவ்வளர்ச்சிகளெல்லாம் முதற்சங்க காலத்துக்கு நெடுநாள் முன்னரே நிகழ்ந்து நிரம்பிவிட்டன. முதற்சஙக காலததில் அரசு முறைகளும் பிறவும் நன்கு நடைபெற்றன. முதற்சங்க காலத்தில் தமிழகத்திலிருந்த கல்வி கலைகள செல்வம்ஒழுக்கம, இனம, அரசாட்சிமுறை, ஒழுககவழக்கங்களனைத்தையும் முதற்கழகத தலைவர் அகத்திய முனிவர் இயற்றிய இயலிசை நாடகம் என்ற முத்தமிழிலக்கணமாகிய அகத்தியத்தில் தெளிவாய்த் தெரியலாம. இப்பொழுதந்நூலும் பிறநூல்களும் கடல்கொள்ளப்பட்டமையால் தெளிவாயறிய முடியவில்லை. உரைகளிற்கிடைக்கும் அகத்தியசூத்திரங்களாலும் முறையாய் அறியமுடியவில்லை. ஆனால் அகத்தியத்தின்வழி நூலாகிய தொல்காப்பியத்தால் நன்கு தெரிந்துகொள்ளலாம். தெய்வச்செயலாய் செங்கோன்றரைச் செலவென்ற ஒரு நூலில்

---

1. Prof Hackel "The Indian Ocean formed a continent which extended from Sunda Islands along the coast of Asia to the coast of Africa. This large Continent is of great importance from being the probable cradle of the human race.

2. Science of man—Australia. The locality of the origin of the earliest race from recent researches appears to have been on lands now submerged beneath the Indian ocean.

ஆறு பாட்டுகள் மதுரை மறைத்திருவன் சுந்தரபாண்டிய ஓதுவா மூர்த்திகள் அச்சியற்றிய பகுதி கிடைத்திருக்கிறது. அந்நூல் முதலூழி யெனப்படும் தலைச்சங்ககாலத்து குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றிற்கும் இடையே இருந்த பெருவள நாட்டரசனாகிய செங்கோவை முதற்கழகப் புலவர் தனியூர்ச்சேந்தனார் அக்காலத்துத் தலைச்சங்கத்துத் தலைவராயிருந்த சக்கான என்ற தலைமைப் புலவர் கேட்கத் தாப்புலித் தொடரால் பாடினார் என்று அதன் உரைக்குறிப்பால் நன்கு விளங்குகின்றது. அக்காலத்தில் தமிழ்நாட்டில் நாற்சாதிப்பகுப்புக் கிடையாது. ஊர்பற்றி—பேரூரான், மதுரையான், நெல்லையான் என்று அழைத்தல் போல ஐந்திணை (ஐந்துநிலம்) பற்றி வாழ்ந்த மக்களுக்கு குறிஞ்சிநில மக்கள் முல்லை, பாலை, மருதம், நெய்தல் நிலமக்கள் என்ற பெயர்களிருந்தன. அவர்கள் தெய்வம் உணவு செயல் முதலியவற்றைப்பற்றி நான் தெரியவேண்டியதின்றியமையாததாதலால் அவற்றை விளக்குதும்.

ஐந்திணைக் கருப்பொருள்

இறையனாரகப் பொருள்—உரையிற் கண்டது

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள்; உணா ஐவன நெல்லுந் தினையும்; மா புலியும் பன்றியும் யானையும்; மரம் அகிலும் ஆரமுந் திமிசுந் தேக்கும் வேங்கையும்; புள் கிளியும் மயிலும்; பறை வெறியாட்டுப் பறையுந் தொண்டகப் பறையுங் குரவைப் பறையும்; செயதி தேனழித்தலுங் கிழங்ககழ்தலுங் குன்றமாடுதலுந் தினைக்கிளி கடிதலும்; யாழ் குறிஞ்சியாழ். பிறவுமென்றதனாற் தலைமகன் பெயர் சிலம்பன் வெற்பன் பொருப்பன், தலைமகள் பெயர் கொடிச்சி குறத்தி, நீர் அருவி நீருஞ் சுனைநீரும்; ஊர் சிறுகுடியுங் குறிச்சியும்; பூ—குறிஞ்சியுங் காந்தளும் வேங்கையுஞ் சுனைக்குவளையும்; மக்கள் பெயர் குறவர் இறவுளர் குன்றவர்.

நெய்தற்குத் தெய்வம் வருவணன்; உணா—மீன் விலையும் உப்புவிலையும், மாசுறவும் முதலையும்; மரம்—புன்னையும் ஞாழலுங் கண்டலும், புள் அன்னமும் அன்றிலும் மகன்றிலும், பறை—மீன்கோட்பறையும் நாவாய்ப் பறையும், செய்தி—மீன்விற்றலும் உப்புவிற்றலும் அவை படுத்தலும்; யாழ்—விளரியாழ் இனிப்பிறவு மென்றதனாற் தலைமகன் பெயர் துறைவன், கொண்கன, சேர்ப்பன. தலைமகள் பெயர் நுளைச்சி பரத்தி; நீர்—மணற் கிணறும் உவர்க்குழியும், பூ வெள்ளிதழ்க்கைதையும் நெய்தலும், ஊர்—கலமேறுபட்டினமுஞ் சிறுகுடியும் பாக்கமும். மக்கள் பெயர் பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையிற் றெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையுந் தெய்வமென்று வேண்டுவர்; உணா—ஆறலைத்தனவும் ஊரெறிந்தனவும்; மா—வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும், மரம் இருப்பையும் ஓமையும்; புள்—கழுகும் பருந்தும் புறவும், பறை—பூசற்பறையும், ஊரெறிபறையும், நிரைகோட் பறையும், செய்தி—நிரைகோடலுஞ் சாத்தெறிதலுஞ் சூறைகோடலும்; பண் பஞ்சுரம், பிறவுமென்றகனாற் தலைமகன் பெயர் மீளி விடலை காளை, தலைமகள் பெயர் எயிற்றி பேதை; பூ—மராம்பூவுங் குராம்பூவும் பாதிரிப்பூவும்; நீர் அறுநீர்க்கூவலும் அறுநீர்ச்சுனையும்; மக்கள் பெயர் எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்: ஊர் கொல் குறும்பு,

முல்லைக்குத் தெய்வம் வாசுதேவன்; உணா—வரகுஞ்சாமையும், மா—முயலுஞ் சிறுமானும்; மரம்—கொன்றையுங் குருந்தும், புள்—கானங்கோழியும் மயிலுஞ் சிவலும்; பறை—ஏறுகோட்பறையும் முரசும், செய்தி—வரகுக்குக்களைகட்டலும் அவையறுத்தலுங் கடாவிடுதலும் நிரை மேய்த்தலும்; பண் முல்லை. பிறவுமென்றகனால் தலைமகன் பெயர் குறும்பொறை நாடன். தலைமகள் பெயர் கிழத்தி மனைவி; இப்பெயர் மருத நிலத்துத் தலைமகட்கும் உரியது, பூ முல்லையுந் தோன்றியும், நீர் கான் யாறு, ஊர் பாடியுஞ்சேரியும், மக்கள் பெயர் இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்

மருத நிலத்துக்குத் தெய்வம் இந்திரன்; உணா செந்நெல்லும் வெண்ணெல்லும், மா—எருமையும் நீர்நாயும்; மரம்—வஞ்சியுங் காஞ்சியும் மருதும்; புள்—நீர்க்கோழியுந் தாராவும்; பறை—மண முழவும் நெல்லரிகிணையும்; செய்தி—நெல்லரிதலும் அவைகடாவிடுதலும் பயிர்க்குக்களைகட்டலும்; யாழ்—மருதயாழ் பிறவுமென்றகனால் தலைமகன் பெயர் ஊரன் மகிழ்நன, தலைமகள் பெயர் கிழத்தி மனைவி. பூ—தாமரைப் பூவுஞ் செங்கழுநீர்ப்பூவும், நீர்—மனைக்கிணறும் பொய்கையும். மக்கள் பெயர் கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர், ஊர் பேரூர் எனப்படும்.

அறுவை மருத்துவம்

மூளையில் இரண வயித்தியம்

இங்கிலாந்திலுள்ள "பிரிட்டிஷ் மெடிகல் அஸோஸியேஷன்" என்னுமோர் சங்கத்தில், அதின் "ப்ரெஸிடெண்ட்" ஸ்தானத்திலிருக்கும் ஸர். வில்லியம மாகீவன் என்பவர் வெகு சமீபத்தில், ஒருவனுடைய மூளைக்குள் தாம் செய்த "ஆப்பரேஷனைப்" பற்றிப் பேசினார். தனது தலைக்குள் கிளம்பிய சிரங்கு உபத்திரவத்தால், அவன் இறந்து விட்ட

வன்போலவே காணப்பட்டான். ஆகிலும் கருவிகளைக்கொண்டு அவனுடைய சுவாசம் நிற்காமல் செய்து, அவன மண்டையைப் பிளந்து, அதற்குள்ளிருந்த சிரமகு சம்பந்தமான அசுத்தத்தை யெல்லாம் வெளியே எடுத்தவுடன், அவன் திடீரென விழித்துக்கொண்டான். மூளைக்கு ஆபரேஷன் செய்வதால்; குருடர்கள் பார்வையை அடைவார்கள். செவிடர்களுக்கும் கேட்கும் சக்தி வந்துவிடும். வாதம்முதலியவைகளால் நடமாடத் திறமையற்றவர்கள் கிடக்கோடு எழுந்திருப்பார்கள். இன்னும் ஒருவன் இழந்த சக்திகளையும திரும்பப் பெற்றுவிடலாம். சில வருஷங்களுக்குமுன், தலைக்குள் குண்டுகள் பாய்ந்துவிட்டால், சாவுதான் முடிவாயிருந்தது. ஆயினும் இப்பொழுது பிழைத்தெழுந்தவர்கள் பலர் உண்டு. சிரோரோகத்தால் மிகவும் கஷ்டமடைந்தவன் ஒருவனை, X—கிரணங்களைக்கொண்டு பரீக்ஷைசெய்து பார்த்ததில், அவனது மூளையின் ஓர் பாகம் அழுகியிருந்ததை வைத்தியர்கள் கண்டுபிடித்தார்கள். அவனோ மயக்கத்தில் ஆழ்ந்துகிடந்தான். வைத்தியர்களும் அந்தப் பாகத்தை எடுத்தெறிந்துவிட்டு, அதற்குப்பதிலாக வேறொன்றை அவ்விடத்தில் வைக்க நிச்சயித்தனர். அன்றையதினம் தான் ஒரு குழந்தை அவ்வைத்திய சாலையில் பிறந்து இறந்துவிட்டது. அதின் மூளையை உடனே எடுத்து, அதைக்கொண்டு அவனுக்குத் தாம் நினைந்தபடியே "ஆபரேஷனும்" செய்துமுடித்தார்கள். ஒருவாரத்தில் அவன் குணமடைந்தான். இவ்வாறு மூளைக்குள்ளும் 'இரணவைத்தியம் செய்வதால், ஆச்சரியமான நன்மைகளுண்டாகின்றன.

தன்னுடைய மண்டைக்குள் கிளம்பியிருந்த "புரைப்புண்" என்னும் ஒரு ரோகத்தால் நிரம்பவும சிரமப்பட்டவன் ஒருவன் "ஹாஸ்பிடலுக்கு" வந்து சேர்ந்தான். அங்கே வைத்தியர்கள் அவன் மூளைக்குள் ஆபரேஷன் செய்து, அந்தப் புண்ணையும் எடுத்தெறிந்தனர். உடனே அவன் சௌக்கியமடைந்ததும் அல்லாமல், ஏழு வருஷகாலமாய்த் தான இழந்துபோன பார்வையையும் திருமபப்பெற்றான்.

மூளைக்குள் ஆபரேஷன் பண்ணுவதால் துஷ்டர்களும் நல்லவர்களாக மாறிவிடுவார்கள். இதுவே மிக்க அற்புதமாயிருக்கின்றது

ஒருவன் இருநூறு தாம் திருடியதற்காக, ஐந்து வருஷம் தெண்டிக்கப்பட்டான். அவனுக்கு வயது 43. எப்பொழுதும திருடுவதிலும், குற்றம் செய்வதிலுமே அவன் மனம் பதிந்திருந்தது. ஜெயிலில் பரிசோதித்ததில் அவன் மண்டையில் ஒரு பள்ளமிருப்பதை வைத்தியர்களறிந்தார்கள். பால்யத்தில் அவன் கீழே விழுந்ததால்தான் அப்பள்ளமுண்டாயிற்றென்பது தெளிவாய்விட்டவுடன, வைத்தியர்கள் "ஆபரேஷன்" செய்யத் தீர்மானிததார்கள். மூளையைப்பலமாய் அழுத்திக்

கொண்டிருந்த அவனுடைய கபாலத்தின் ஒரு பாகத்தை எடுத்துவிட்டார்கள். உடனே வியக்கத்தக்கவாறு பல மாறுதல்கள் அவனிடம் தோன்றின. குற்றம் செய்வதிலேயே கண்ணாயிருந்த அவனது மனோபாவங்களெல்லாம் முற்றிலும் மாறுபாடு அடைந்தது, பெரிய விநோதமாகவே யிருந்தது. மேல்கோர்ட்டார் அவனை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார்கள். அவனும் இப்போது நம்மைப்போலவே சன்மார்க்கத்தில் காலக்ஷேபம் செய்துவருகிறான்.

இதைப்போல் மற்றொரு விஷயமும் ஆச்சரியத்தை உண்டுபண்ணக் கூடும். ஒரு கொலைபாதகன் ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தான். காவலாளர்களும் அவனைக்கண்டால் நடுங்குவார்கள். இப்படி ஜெயிலில் மூன்றுவருஷகாலம் சென்றது. ஒருநாள் ஒரு ஸர்ஜன் அங்கு வந்து அவனைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவனது தலையின் பின்புறத்தில் ஓர் ஆழமான பள்ளம் தோன்றிற்று. இதனால், அவனுடைய கபாலத் துண்டானது மூளைக்குள் பதிந்து கிடக்கவேண்டுமென்று ஸர்ஜனும் ஊகித்தார். ஆபரேஷன் செய்து பார்த்ததில் அப்படியே இருந்தது. அவர் அத்துண்டை வெளியே எடுத்தெறிந்தார். அவன் குணமடைந்தான். அவனுடைய முகமும் ஆச்சரியமாய் மாறிற்று. புத்தியும் சுறுசுறுப்பும், பிரியமும் தாக்ஷிண்யமும் பிறந்து அவனிடம் நன்றாய் விளங்கின. — "தமிழகம்."

சித்தரிற் சிறந்தவராகிய அகத்தியர் ஒரு அரசன் இடைவிடாத் தலைநோயால் வருந்தியபொழுது மயக்கு மருந்தால் மயக்கி அவன் மண்டையைக் கீறித் திறந்துபார்க்க உள்ளே ஒரு தேரை மூளையைப் பற்றிக்கொண்டிருப்பது கண்டு அதை இடுக்கியால் எடுக்கக் கருதினார். அப்பொழுது அவருடனிருந்த அவர் மாணாக்கர் ஒரு பாண்டத்தில் தண்ணீர் கொண்டேந்த அத்தேரை அதனிற்குதித்தது. உடனே மண்டையைப் பொருத்திச் சஞ்சீவி காரணியென்ற மூலிகையால் ஆற்றி நோயை நீக்கினார். அமயத்தில் தேரையை வெளியேற்றுஞ் சூழ்ச்சி புரிந்த மாணாக்கருக்குத் தேரையர் என்ற காரணப் பெயர் சூட்டினார்: அது முதல் அவருக்கு அப்பெயர் வழங்கியது. அந்தத் தேரையர் பதினெண் சித்தர்களிலொருவர் ஆனார். அவர் செய்த சித்த நூல்கள் இலக்கக் கணக்கிலிருக்கின்றன. ஆகலால் முற்காலத்தில் தமிழ் வைத்தியத்திற் றேர்ந்த சித்தர்களும் மூளையில் இரண வைத்தியஞ் செய்துவந்தமை விளங்குகின்றது. பிற்காலத்தில் தமிழரசர் ஆட்சி இல்லாமற் போனாலும் 2000 ஆண்டாக பிற நாட்டாரின் படையெடுப்பு முதலியவற்றாற் கலக்குண்டதாலும், தமிழ் வைத்தியத்தில் அறுவையில்லாமற் குணமாக்கத்தக்க பல மருந்துகளும் மூலிகைகளுமிருப்பதாலும், இரண

சிந்தாமணி முதலிய நூல்களிருந்தும், தமிழ் நாட்டில் சிறந்த இரண வைத்தியம் குறைந்துவிட்டது.

பலவகையான சிற்றுயிர்களும் புழுக்களும் மக்களுடலில் பலவாறு புகுந்து பல நோய்களை யுண்டாக்குகின்றன. யானைக்கால், நரம்புச் சிலந்தி மாமாரி (பிளேக்) முதலிய நோய்களிலும் புழுக்களும், அவற்றின் முட்டைகளும் உட்சென்று குஞ்சுபொரித்துப் பல்கிப்பெருகி நோய் செய்தலைக் காண்கின்றோம், அவ்வாறே மிகச் சிறிய தேரையின் சினை மூக்குத்துளைவழி சென்று மூளையிற்றங்கிக் குஞ்சாகிப் பெருகித் தேரையாய் நோய்செய்த தென்பதியல்பே.

ஆதலால் தமிழ் இரணவைத்திய நூல்களைச் சேகரித்து அச்சிட்டு பரப்பும்செயலை ஒவ்வொரு தமிழ் வைத்தியரும் மேற்கொள்ள வேண்டு கிறேன்.

நாட்டலைவர்

பாம்புகடிக்கு மருந்துகள்

1. பாம்புக்கடி யுண்டவனை ஒரு கிணறு அல்லது ஆற்றின் கரையில் வைத்துக் குடத்தில் நீரை யெடுத்துவிட்டுவர அறிவோடுள்ளவன் குளிர்கிறதென்று சொல்லும் பொழுது நிறுத்தவேண்டும். அறிவு கெட்டிருந்தவனுக்கு விடமிறங்கி நினைவு வந்து குளிர்கிறதென்று சொல்லும்வரை நீரை விட்டுக்கொண்டிருக்கவேண்டும், பிற்பாடு நிறுத்தவேண்டும். நீர் வார்த்தலை நிறுத்தியபின் குளிர்ந்த நீரில் உப்புப்போட்டுக் குடிக்கக் கொடுக்கவேண்டும். இவ்வாறு செய்து பலர் குணமடைந்திருக்கின்றனர்

பாம்பின விடம் அனுப்பானங்களோடு கலந்தருந்தினாலும் அளவறிந்துட்கொண்டாலுங் கொல்லாது. ஆனால் உடலைக்கீறி இரத்த ஓட்டத்தில் விடத்தை சேர்த்துவிட்டாலும் பாம்பு கடித்தாலும் இரத்தவோட்டத்திற் சேர்ந்து இரத்தத்தை முறித்து அறிவைக் கெடுத்து சாவை யுண்டாக்குகின்றது. குளிருபடி குளிர்ந்த நீர் வார்ப்பதால் நீர் விடத்தை முறித்து வெளியேற்றி இரத்தத்தைத் தூய் தாக்கலால் குண மடைகின்றனர்.

2. பாம்பு கடிக்கப்பெற்றவனுக்கு மயில்துத்தத்தை பொரித்து உறிஞ்சும்படி செய்தால் சளியுங் கோழையும் வெளிப்பட்டு விடம் நீங்கும். அறிவிழந்திருப்பவன் மூக்கில் மை பொடியை குழாய் மூலமாய் ஊதினால் மை பொடி மூக்குக்குள்ளேறி விடம் முறிபட்டு நினைவடைந்து குணப்படுவான்

3. பாம்புகடிக்கப் பெற்றவன் எருக்கம்பூ 5—10 வரை வாயிற் போட்டு மென்றுட்கொள்ள நஞ்சு நீங்கிக் குணப்படும்.

4. பாம்புகடியுண்டவனுக்குப் பச்சைப் புகையிலைச் சாறு ($\frac{1}{61}$) படி உட் கொடுக்க வாந்தியாய்க் குணப்படும். 3 ரூ இடை காய்ந்த புகையிலை அரைத்து நீரிற்கலக்கிக் கொடுத்தாலும் விடம் நீங்கும். சமயத்துக்குக் கிடைத்த மருந்தையுபயோகிப்பதற்காக பல முறைகள் கூறப்பட்டன.

மூலிகைகள் ௲அ (25-ம் பக்கம் தொடர்ச்சி)

௨௪௧ கரிக்கருணை
௨௪௨ கரணை
௨௪௩ கருவேல
௨௪௪ கமுகு
௨௪௫ கல்தாமரை
௨௪௬ கல்லாறை
௨௪௭ கருப்புக் கரிசாலை
௨௪௮ கார்த்திகைக் கிழங்கு
௨௪௯ காட்டுள்ளி
௨௫௦ காட்டுச்சேம்பு
௨௫௧ காட்டுப்புதினா
௨௫௨ காணி
௨௫௩ காட்டு முத்து
௨௫௪ காக்கலை
௨௫௫ காந்திராய்
௨௫௬ காட்டுப் பிராயன்
௨௫௭ காத்தொட்டி
௨௫௮ காராசண்ணி
௨௫௯ காட்டுப்பாலை
௨௬௦ காணப்பலா
௨௬௧ காயாமரம்
௨௬௨ காக்கைக்கரிச்சான்
௨௬௩ காஞும் வாழை (காட்டு வாழை)
௨௬௪ காழகருணை
௨௬௫ காய்வள்ளிக்கிழங்கு
௨௬௬ காராமணி
௨௬௭ காட்டுப்புக்கு
௨௬௮ காடை
௨௬௯ காளான்
௨௭௦ காட்டு அலரி
௨௭௧ காட்டாமணி
௨௭௨ கார்முகிற் பச்சிலை
௨௭௩ காட்டுச்சுரை
௨௭௪ காடைமணிச்சம்பா
௨௭௫ கார் கோலர்சிச்செடி
௨௭௬ கிட்டிக் கிழங்கு
௨௭௭ கிரந்திநாயகம்
௨௭௮ கிளுவை
௨௭௯ கிளா
௨௮௦ கிளி யூரல்
௨௮௧ கிராம்புச் செடி
௨௮௨ கிச்சிலி
௨௮௩ கிளிமூக்கு மரம்
௨௮௪ கீழ்க்காய் நெல்லி (கீழ்வா நெல்லி)
௨௮௫ கீரைத்தண்டு
௨௮௬ கீரி மூலி
௨௮௭ கீரைப்பசலி
௨௮௮ குரு மூலி
௨௮௯ குன்றி
௨௯௦ குண்டலப்பாலை
௨௯௧ குண்டலம்
௨௯௨ குருவிச்சி
௨௯௩ குருவிருஞ்சி
௨௯௪ குடைக்காளான்
௨௯௫ குட்டித் தக்காளி
௨௯௬ குட்டிவிளா

௨௯௭ குடசப்பாலை
௨௯௮ குளப்பாலை
௨௯௯ குடப்பனை
௩௦௦ குடியோட்டு பூண்டு
௩௦௧ குறிஞ்சான்
௩௦௨ குடப்பாலை
௩௦௩ குருந்தொட்டி
௩௦௪ குதிரைக் குளம்பிலை
௩௦௫ குருக்கத்தி
௩௦௬ குத்துவாளை
௩௦௭ குமரி
௩௦௮ குதிரை வாலி
௩௦௯ குருந்தும்பை
௩௧௰ குரட்டை
௨௧௧ குறிஞ்சி
௩௧௨ குருவை நெல்
௩௧௩ குழி மிட்டான்
௩௧௪ குலாமல்லி
௩௧௫ குளித்தாமரை
௩௧௬ குகசபாலை
௩௧௭ குளப்பாலை
௩௧௮ குமருடோரி
௩௧௯ குன்றிமணிச்சம்பா
௩௨௰ குருஞ்சம்பா
௩௨௧ குண்டச்சம்பா
௩௨௨ குரோசாணிச்செடி
௩௨௩ குண்டலைப்பாலை
௩௨௪ குருவிஞ்சிச்செடி
௩௨௫ குருவிச்சி
௩௨௬ குதிரைப்புடுக்கு மரம்
௩௨௭ குருக்கு
௩௨௮ கூழ்ப்பாண்டம்
௩௨௯ கூதனை குதம்பை
௩௩௦ கூவிளம்
௩௩௧ கூவைக்கிழங்கு
௩௩௨ கூந்தற்பனை
௩௩௩ கெச்சக்காய்
௩௩௪ கேச்குவிதை
௩௩௫ கேழ்வரகு
௩௩௬ கைவரைசம்பா
௪௩௭ கொத்தான்
௩௩௮ கொததமல்லி (உருளாசி)
௩௩௯ கொல்லகோவை
௩௪௰ கொள்ளிலை
௩௪௧ கொட்டைக்கிளங்கு
௩௪௨ கொட்டி
௩௪௩ கொடுக்காப்புளி
௩௪௪ கொடிபபுளி
௩௪௫ கொடிக்கள்ளி
௩௪௬ கொளுஞ்சி
௩௩௭ கொல்லை
௩௪௮ கொடிமாதுளை
௩௪௯ கொடிப்பூண்டு
௩௫௰ கொலவி
௩௫௧ கொடுப்பை
௩௫௨ கொட்டிக்கிளஙகு
௩௫௩ கொட்டைப்பாசி
௩௫௪ கொட்டாங்காநதை
௩௫௫ கொடிக்குரிஞ்சா
௩௫௬ கொழுஞ்சி நாரத்தை
௩௫௭ கொமட்டிமாதுளை
௩௫௮ கொமபன்பாகல்
௩௫௯ கொடிமுந்திரி
௩௬௰ கொடிநாரத்தை
௩௬௧ கொய்யா
௩௬௨ கொயபுப்புடல்
௩௬௩ கொருக்கு, (கொழுந்து)
௩௬௪ கொச்சிமஞ்சள
௩௬௫ கோடகசாலை
௩௬௬ கோடன்கிழங்கு
௩௬௭ கோவை
௩௬௮ கோரங்கிழஙகு
௩௬௯ கோஙகிலவு மரம்
௩௭௰ கோழியவரை

௱௭௧ கோடாசூழி
௱௭௨ கோவகு மரம்
௱௭௩ கோதுமை
௱௭௪ கோடை
௱௭௫ கோரை
௱௭௬ கௌதும்பை
௱௭௮ சதுரக்கள்ளி
௱௭௯ சத்திச்சாரணை
௱௮௰ சடாமஞ்சிச்செடி
௱௮௧ சந்தனமரம்
௱௮௨ சதையொட்டியிலை
௱௮௩ சதகுப்பி
௱௯௪ சப்பாத்தி
௱௮௫ சமுத்திராப்பழச்செடி
௱௮௬ சக்கரைவேம்பு
௱௮௭ சண்பகமரம்
௱௮௮ சடைக்கஞ்சா
௱௮௯ சந்திரமல்லி
௱௯௯ சந்திரகாந்தி
௱௯௧ சர்க்கரைவள்ளி
௱௯௨ சம்பங்கி
௱௯௩ சங்கஞ்செடி
௱௯௪ சணம்பு
௱௯௫ சங்கங்குப்பி
௱௯௬ சவ்வரிசி
௱௯௭ சக்கை
௱௯௮ சதைகரண்டி (கோடக சாலை)
௱௯௯ சம்பாநெல்
௨00 சதாபூமரம்
௨0௧ சவுக்கு
௨0௨ சந்நாசிமூலி
௨0௩ சாகாமூலி
௨0௪ சாரணை
௨0௫ சாய்கைவேதி
௨0௬ சாணாக்கிப்பூடு
௨0௭ சாடாவிருக்கம்

௨0௮ சாரவேலை
௨0௯ சாயவேர்
௨௧0 சாலாமிசரி
௨௧௧ சாரபருப்பு
௨௧௨ சாதிநாரத்தை
௨௧௩ சாரமரம்
௨௧௪ சாமை
௨௧௫ சாலிக்காய்மரம்
௨௧௬ சாமமரம்
௨௧௭ சிறியாநங்கை
௨௧௮ சிறுசிகணி
௨௧௯ சிவந்ததில்லை
௨௨0 சிவப்புச்சிந்தில்
௨௨௧ சிவனார்வேம்பு
௨௨௨ சிவகாந்தை
௨௨௩ சிவப்புக்கையான்
௨௨௪ சிறுசெருபபடி
௨௨௫ சிறுகீரை
௨௨௬ சித்தர்மூலம்
௨௨௭ சிவந்தசித்திரப்பாலாடை
௨௨௮ சிற்றேரணம்
௨௨௯ சிறுகண்ணுப்பூலை
௨௩0 சிறுதும்பை
௨௩௧ சிற்றாமுட்டி
௨௩௨ சிறுநெருஞ்சி
௨௩௩ சிவத்தநாயுருவி
௨௩௪ சிவந்தசதுரக்கள்ளி
௨௩௫ சிறுகுறிஞ்சான்
௨௩௬ சிவத்தளரி
௨௩௭ சிறுமுன்னை
௨௩௮ சிறுமூலி
௨௩௯ சிவந்தகுறிஞ்சான்
௨௪0 சிறுவழுதலை
௨௪௧ சித்திரமாமூலி
௨௪௨ சிறுநெல்லி
௨௪௩ சிறுளா
௨௪௪ சின்னி

௪௪௫ சிறுகட்டுக்கொடி
௪௪௬ சிவப்புக்கோரைத்தண்டு
௪௪௭ சிவப்புக்கற்றாழை
௪௪௮ சிறுதுத்தி
௪௪௯ சிறுநாகப்பூ
௪௫௧ சிறுகிளா
௪௫௨ சிவந்தகொட்டைகாரந்தை
௪௫௩ சிவந்த ஆளி
௪௫௪ சிவப்பலரி
௪௫௫ சிவந்தகொடிவேலிவேர்
௪௫௬ சிவதை
௪௫௭ சிறுதேக்கு
௪௫௮ சிறுகாஞ்சோரி
௪௫௯ சிறுமலவி
௪௬௦ சற்றிலைப்பாலாடை
௪௬௧ சிகப்புமுள்ளங்கி
௪௬௨ சிவந்தகுளம்புச்செடி
௪௬௩ சிறுதேட்கொடுக்கு
௪௬௪ சிறுபுள்ளடி
௪௬௫ சின்னிக்கிழங்கு
௪௬௬ சிறுவள்ளிக்கிழங்கு
௪௬௭ சிற்றச்சு
௪௬௮ சிறுபூனைக்காலி
௪௬௯ சிகைக்காய் (சீயக்காய்)
௪௭௦ சிறிய குருந்தகலை
௪௭௧ சிவதைச்செடி
௪௭௨ சிவப்புச் சந்தனமரம்
௪௭௩ சீந்தில்
௪௭௪ சீதமூலி
௪௭௫ சீமையகத்தி
௪௭௬ சீமைத்துத்தி
௪௭௭ சீரா செங்கழுநீர்
௪௭௮ சீதாரி
௪௭௯ சீத்தா
௪௮௦ சீரகச்செடி
௪௮௧ சீரகச்சம்பா
௪௮௨ சீக்கிரி மரம்
௪௮௩ சுண்டைக்காய்ச் செடி
௪௮௪ சூரத்து நிலவாகை
௪௮௫ சூரியகாந்தி
௪௮௬ சூரை
௪௮௭ செங்கரை
௪௮௮ செங்கள்ளி
௪௮௯ செம்பல்லி
௪௯௦ செங்கற்றாழை
௪௯௧ செவ்வகத்தி
௪௯௨ செம்பரத்தை
௪௯௩ செங்கீரைச்செடி
௪௯௪ செந்தாமரை
௪௯௫ செவ்வலரி
௪௯௬ செவ்வள்ளி
௪௯௭ செவ்வல்லி
௪௯௮ செம்முள்ளி
௪௯௯ செவந்த நாயுருவி
௫௦௦ செங்குன்றி
௫௦௧ செந்தாடுபாவை
௫௦௨ செங்கொடுப்பை
௫௦௩ செங்கொடிவேலி
௫௦௪ செவப்புத்தாளி
௫௦௫ செம்பருத்தி
௫௦௬ செவ்வாமணக்கு
௫௦௭ செம்பாளை
௫௦௮ செந்தாழை
௫௦௯ செந்தொட்டி
௫௧௦ செம்பசலி
௫௧௧ செங்கொன்றை
௫௧௨ செங்கழுநீர்
௫௧௩ செப்புநெரிஞ்சி
௫௧௪ செம்பொன நெருஞ்சி
௫௧௫ செங்கோவை
௫௧௬ செந்துளசி
௫௧௭ செந்தாரா
௫௧௮ செஞ்சோளம்
௫௧௯ செஞ்சம்பா

தமிழ் வைத்திய சங்க வேண்டுகோள்

தமிழ் நாட்டில் முதற்கழகம், இடைக்கழகம், கடைக்கழகம், என மூன்று சங்கங்கள் முறையே தென்மதுரை, கபாடபுரம், மதுரை, என்ற புரிகளில் சற்றேறக்குறைய 12 ஆயிரம் ஆண்டு தொட்டு நிகழ்ந்து வந்தன. முதற் சங்க காலமுதல் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் இலக்கணங்களும், இறைவன், உயிர், உலகு என்ற முப்பொருள்களைப்பற்றிய அறிவு நூல்களும் கலைகளும் பலவிருந்தன, இருக்கின்றன. எல்லா நூல்களுக்கும் இறைவன் முதலாசிரியனுயினமைபோல வைத்தியம், வாதம், மந்திரம், கற்பம் யோகம்பற்றிய தமிழ்நூல் ஒன்று 7 இலக்கம் பாட்டிற் கூறி அவைகட்கும் முதலாசிரியராயினர். அம்முதல் நூலைப் பின்பற்றி நந்தி, சனகர், சனந்தர், சனந்தனர் சனற்குமாரர், திருமூலர் பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர் காலாங்கி, போகர், கொங்கணர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, தேரையர், யூகிமுனி முதலிய சித்தர்கள் இலக்கணக்கான சித்த நூல்கள் தமிழிற் செய்தருளினர்.

சித்தர் நோய் நீக்கற்கு மணி, மந்திரம் மருந்து என மூன்று வழிகளை வகுத்தியடுத்தினர். அவற்றில் மணி என்பது இரசமணி, மந்திரம் என்பது பலதேவதைகளின் மனுக்கள், மருந்து என்பது காப்பு நீக்கம், நிறைப்பு என மூவகைப்படும். காப்பு என்பது நோய் வாராமற் காக்கும் மருந்துகள் ஒழுக்கங்கள், நீக்கம் என்பது வந்த நோய்களைப் போக்கு மருந்துகள். நிறைப்பு என்பது உடலிற் குறைந்த சத்துக்களை உண்டாக்கி நிறைத்துக் குணஞ்செய்யு மருந்துகள். நோய் விலக்கு முறைகளைத் திருமூல தேவர் 1. மூலிகை வகை 2. உப்புவகை 3. நீர்வகை 4. உபரசவகை 5. உடற்பொருள் வகை, 6. பாடாண வகை, 7 உலோக வகை. 8. சத்துவகை, 9. இரச குளிகை வகை. 10 யோக வகை எனப் பகுத்திருக்கின்றனர். இரச குளிகை வகையில் மணியும், யோக வகையில் மந்திரமும் அடங்கும்.

திருமூல தேவர் மேற்கூறிய மருந்துகளனைத்தையும் மக்களுறை குருறைதேவுறை என மூவகையாகப் பகுத்திருக்கின்றனர். 1. மூலிகை, பொடி (சூரணம்) லேகியம், மெழுகு, எண்ணெய் முதலியன மக்களுறை. 2. அறுவை புண்ணாக்கி களிப்பு துவரெண்ணெய் முதலியன 3 நீறு (பற்பம்) செந்தூரம் சுன்னம், செய்நீர், திநீர், சத்து, மணி முதலியன தேவுறை, இம்மூவகை மருந்துகளும் தமிழ்ச்சித்த வைத்தியம் ஒன்றில்தான் நிறைந்துள்ளன.

மருந்துகளின் இயைபு கூறுமிடத்து ஒப்புறை (Homeopathy) எதிருறை (Allopathy) கலப்புறை என நோய்களை மருந்துகள் போக்கும் முறைகளை விளக்கியிருக்கின்றனர். ஆங்கில வைத்தியம் எதிருறை

(Allopathy) என்றழைக்கப்படும்; ஆனால் அம்முறையிலேயே முற்றும் நிலைப்பதில்லை. பிரஞ்சு, ஜெர்மனி வைத்தியம் ஒப்புமுறை (Homeopathy) ஆம், சமஸ்கிருத ஆயுள் வேத வைத்தியம் எதிருறை தமிழ்ச் சித்த வைத்தியம் அவ்விரண்டும் கலப்புறை யென்ற மூன்றுவகை முறையுமுடையது.

உப்புவகை 25. பாடாணவகை 64. உலோகங்கள் 9. உலோக வகைகளாகிய சத்துகள் 120. மூலிகை வகை 1008 களினின்று அற்புதமான மருந்து முறைகளெல்லாம் சித்த வைத்தியத்திலன்றி வேறு வைத்தியங்களிலின்று. சம்ஸ்கிருத ஆயுள்வேத நூல்களின் கரைகண்ட வட இந்தியாவிலுள்ள கவிராஜர் என்ற ஆயுள்வேத வைத்தியத் தலைவர் எல்லாம் தென்னாட்டிலுள்ள சித்த முறைகளை நாம் கற்றுக்கொள்ளவேண்டும் அவை சிறந்தனவென்று கூறுகின்றனர். கனம் மகமத் உசுமான் சாயப்பகதூர் அவர்களைத் தலைவராய்க்கொண்ட சுதேச விசாரணைக் கமிட்டியார் தமிழ்ச் சித்த வைத்தியம், சம்ஸ்கிருத ஆயுள் வேத வைத்தியம், யூனானி வைத்தியம் என்ற சுதேச வைத்திய மூன்றுக்கும் கவர்ன்மெண்டார் உதவிசெய்யவேண்டுமென்று தீர்மானித்துச் சிபார்சு செய்திருக்கின்றனர்.

திருவள்ளுவநாயனார் "நோய் நாடி நோய் முதனாடியது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்று கூறியிருத்தலால் நோய் அறிதற்கு நாடி, கண், நா, உடல், மலம், நீர், தொடல், ஒலி, என எட்டுவகைத் தேர்வுகளைச் சித்தர் விரித்துரைத்திருக்கின்றனர். பின்னும் நாயனார் "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்றப்பானாற் கூற்றே மருந்து" என்று நோயாளன் மருத்துவன் உழைச்செல்வான் மருந்து என்ற நான்கையும் விளக்கியுள்ளார். அதனால் 2000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மருத்துவ சாலைகளில் உழைச்செல்வான் எனப்பட்ட நர்சு இருந்தமையும் தேரையர் மருத்துவசாலை இலக்கணங் கூறியிருப்பதால், 32 அறங்களில் நோய்க்கு மருந்து என்ற தருமம் நடந்த மருத்துவ சாலைகள் தமிழ் நாட்டிலிருந்தமையும் நன்குவிளங்கும்.

சம்ஸ்கிருத ஆயுள் வேத நூல்களில் முதன்மையானவை, சாகம், சுசுருதம் தன்வந்திரிநிகண்டு என்பனவே, அவற்றில் நாடி முதலிய அட்டவித இலக்கணங்களும் தெய்வ உறைகளாகிய இரசம், கெந்தகம் பாடாணம் முதலியவற்றின் பற்பம், செந்தூரம், சுன்னம் கட்டுமெழுகு சத்து முதலிய மருந்துகளும், காயசித்திக்குரிய கற்ப மருந்துகளும் இரசமணிகளும் கூறப்பட்டில்லை. மேற்கூறிய வடமொழி ஆயுள்வேத நூல்களின் காலம்பற்றிக் கருதில் தன்வந்திரி விக்ரமராஜன் சபையில் ஒன்பது மணிகளாக மதிக்கப்பட்ட வடமொழிப் புலவர்களில் ஒருவர், அவரகள் காலம் கி. பி. 500 என்று R. C. டட் தீர்மானித்திருக்கிறார். சுசுருதரும் தன் வந்திரியும் ஒரு காலத்தவராதலால் சுசுருதர் காலமும் கி. பி. 500 தான், சாகதத்தின் காலம் அதற்கு முந்தியது, வாக்படர் அஷ்

டாங்க இருதயத்தைக் கி. பி. 9-வது நூற்றாண்டிற் செய்தனர். சமஸ்கிருத ஆரியர் பிற்காலத்தில் தமிழ்ச்சித்தர் நூல்களிற் பயின்று அவற்றிலுள்ள நாடி இலக்கணத்தையும் சிலபற்பம் முதலிய மருந்துகளையும் படித்து வடமொழியில நூல்கள் எழுதினர். அவரில் கி. பி. 13-வது நூற்றாண்டிலிருந்த சாரங்கதார் என்பவர் தாமெழுதிய சாரங்கதர சங்கிதையில் தாம் தமிழின்று படித்த நாடி இலக்கணத்தையும் அயம், முத்து, பவளம் கந்தகம் உலோகங்களின் பற்பம் இரசக் கலப்பு மருந்துகளையும் கூறியுள்ளார். ஆயினும் அவை ஈரசாரம் அல்லது முப்பூ சம்பந்தப்பட்ட சித்தர் உயர் முறைகளன்று. இவ்வுண்மையை வைத்திய ரத்தின பண்டிதர் டி. கோபாலாசாரியார் தமது பிரசங்கத்தில் 'நாடியிலிருந்து நோயறியும் விதத்தை சரகர், சுசுருதர், வாக்படர், மாதவகரர் இவர்கள் சொல்லவில்லை. சாரங்கதரர் மாத்திரம் நாடியைக்குறித்து கொஞ்சம் தெரிவித்திருக்கின்றனர். இவ்வஷ்டகான பரீக்ஷா விதானத்தை முதல் முதல் வைத்திய நூல்களிற் சேர்த்தது 13-வது நூற்றாண்டிலிருந்தவரான சாரங்கதரர் என்று இப்பொழுது தெரிகின்ற காரணங்களைக்கொண்டு சொல்லலாம்', என்று கூறியிருக்கின்றார். சமஸ்கிருத ஆயுள்வேத முன்னூல்களிற் கூறும் பரீக்ஷை மூன்றே. அவை தர்சனம், ஸ்பர்சனம் பிரஸ்நம (காண்டல் தொடல் கேட்டல்) கள். அவை சிறந்த பரீக்ஷையன்றென்பதை அறிஞர் அறிவர். பிற்காலத்தவரான ஆதிமல் நித்திய நாதன் சந்திரசேனன் சோமதேவன் கோவிந்தன் நாகார்ச்சுனன் முதலியவர் தமிழ்ச் சித்தர் முறைகளைத் தெரிந்து சில நூல்களெழுதியிருக்கின்றனர். இரசரத்தின சமுச்சயம் (இரசரத்தினங்களின் திரட்டு) என்ற நூலும் பின்னால் வடமொழியில் எழுதப்பட்டுளது. வட ஆரியர் தென்னாட்டுக்குவந்து பலவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் நூல்களினின்று தெரிந்தெழுதிய பொருள்களை வடமொழியாளர் தமிழர்க்குத் தந்ததாய்க் கூறுவதும் தமிழ்ப் பழநூல்களின் ஆராய்ச்சியில்லாத தமிழர் அவற்றை நம்பி மயங்குவதும் அறிஞர்க்குப் பெருவியப்பை விளைவிக்கின்றது. பாவமிசிரர் பாவப்பிரகாசம் என்ற நூலை கி. பி. 16-வது நூற்றாண்டில் எழுதிப் பல பிறசரக்குகளையுஞ் சேர்த்தனர்.

ஆங்கிரத்தில்சென்ற நூற்றாண்டில் நவநாத சித்தரின் சாபாஜீயம் என்ற நூல்கள் தமிழினின்று பல தெரிந்தெழுதப்பட்டன. அம்முறைப் பற்பங்கள் கரியதாய்ச் சத்துள்ளதாயிருப்பதால் உயர் நீற்றினங்களல்ல.

"எல்பின்ஸ்டன் என்ற ஆங்கில ஆசிரியர் ஹிந்துக்கள்தான் முதன் முதல் உலோகங்களை வைத்தியத்தில் உபயோகப்படுத்தியவர்கள். இரசத்தையும், பாஷாணத்தையும் உபயோகப்படுத்த அவர்களிடமிருந்தே நாம் கற்றுக்கொண்டோம், என்று சொல்லியதால் தமிழ்நாடே உலோகம் இரசம்பா

டான மருந்து முறைகளை உலகுக்குதவியதென்பது நன்கு விளங்கும்: அவை
சம்ஸ்கிருதாயுள் வேத நூல்களிலில்லாமையால். 20 ஆண்டுகளுக்குமுன் இத்
தமிழ்நாட்டிற்கு சம்ஸ்கிருத ஆயுள் வேத வைத்தியம் வரவுமில்லைப் பரவு
மில்லை. பூர்வகாலந்தொட்டு இத்தமிழ் நாட்டில் சிற்றூர்களிலும் பேரூர்களி
லும் ராஜதானி நகரங்களிலும், அரசர் அரண்மனைகளிலும், தஞ்சாவூர் அரண்
மனையிலும் தமிழ்ச் சித்தவைத்தியமே பரம்பரையாய் நடந்துவந்தது. நடந்து
வருகிறது. மற்ற வைத்தியங்களிற்றீராத பெரிய நோய்களை குறைந்த
செலவில் மிக விரைவில் தீர்ப்பது சித்த வைத்திய மருந்துகளே. அவ்
வாறு நடைபெற்றும் ஆரியர் சரக முதலிய சமஸ்கிருத நூல்களில் எல்
லாப் பற்ப செந்தூரங்களும் கூறப்படுகின்றன வென்று சிலவிடத்தும், சித்த
வைத்திய மருந்துகள் கெடுதி செய்வன பயனற்றனவென்று சிலவிடத்தும்
பற்ப செந்தூர சுன்னங்கள் சமஸ்கிருத ஆயுள்வேத முறைகளென்று சில
விடத்தும், சமஸ்கிருத ஆயுள்வேத வைத்தியமே சிறந்ததென்று பலவிடத்
தும் கூறித் தமிழரை மயக்குகின்றனர். அதை நம்பிப்பலர் தமிழ்ச் சித்த
வைத்தியத்தைக் கைவிட்டு சமஸ்கிருத ஆயுள்வேத வைத்தியத்தையே
ஆதரிக்க முற்படுகின்றனர்.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் உரையிற்கூறியபடி தொல்காப்பியத்
துக்கு நெடுநாட் பின்னர் வியாச முனிவர் இருக்கு யசுர் சாமம் என்ற வேதங்
களை வகுத்தனர் அதன்பின்னர் அதர்வணம் சேர்க்கப்பட்டது அதன்பின்னர்
வடமொழியினர் ஆயுர்வேதம் அருத்தவேதம் தனுர்வேதம் காந்தருவவேதம் என
உபவேதங்கள் நான்கு கற்பிக்கக்கருதிப் பெயர் வகுத்தனரன்றி அவ்வேதங்
களை எழுதி முடிக்கவில்லை இதுவரை அத்தகை வெறும் பெயரை வைத்துக்
கொண்டு உலகத்தை மயக்கிவருகின்றனர். ஆயுர்வேதமென்றொரு நூல் வட
மொழியிற் கிடையாது அதை வைத்தியத்துக்குப் பெயராய் வழங்கி வருகின்
றனர்.

தமிழிற் சிவனார் ஆயுள்பற்றிய இரகசியங்களை ஆயுள் வேதம் என்ற
பெயரால் 7 இலக்கம் பாட்டிற் கூறினர். சித்தர் அதனை வழிநூலாக ஆயுள்
வேதம் என்ற பெயராலும் வேறு பெயராலும் பல இலக்கக் கணக்கில் நூல்
கள் செய்திருக்கின்றனர். ஆரியர் வேற்றுமை தெரியாமற் குழப்பி வருவதை
ஒழிக்கும் பொருட்டுத் தமிழ் வைத்தியம் சித்த வைத்தியமென்றும் சமஸ்
கிருத வைத்தியம் ஆயுர்வேத வைத்தியமென்றும் வழங்கப்பட்டுவருகிறது.

பிச்சலந்தை கு-797ல் "மிலேச்சராரியர்" என்று தமிழர் கருதிய ஆரியர்
பிற்காலத்து நாற் குலங்களை வகுத்துத் தங்களுக்கிந்நாட்டில் உயர்வு நாட்டிப்
பல உரிமைகளையும் பெருமைகளையும் ஈட்டினர். மிருதிகளிற்பல அநீதிகளை
யெழுதிவைத்தனர். கலியாணத்திலும் சாவிலும் பெற்றார் நாட்களிலும் தங்
களுக்குப் பொருள்தரப் பெற்று வாழ்ந்தனர். எளியவர்கள் பலர் பசியால் வரு
ந்த தமிழ் நாட்டறங்களில் ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு அனுசமயத்

தோர்க்குண்டி என்ற தருமங்கள் பொதுப்பட எழிலவர்க்கேற்பட்டிருந்ததை ஆரியர் தங்களுக்கே உரித்தாக்கினர். கிரீசைகளில் தானமாகப் பொருள் பெற்றுவந்த ஆரியர் இக்காலத்தில் சுவர்க்கமெண்டு சம்பந்த உத்தியோகங்களிற் பிரவேசித்து பெரும்பாலும் அவற்றைத் தங்களுக்கே உரித்தாக்கினர், தமிழர் சங்கமேற்பட்டு திராவிடரும் உத்தியோகங்களிற் புகவே ஒத்துழையாமையைப் பெருக்கி சுவராஜ்யக் கக்ஷியிற் பலரைச் சேர்த்துத் தங்களுக் கநுகூலந்தேடிக் கொள்கின்றனர். தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சித்த வைத்தியத்தைக் குறைகூறி சம்ஸ்கிருத ஆயுள் வேத வைத்தியத்தைப் புகழ்ந்து ஜில்லா போர்டு தாலுகா போர்டு முனிசிபாலிட்டி யூனியன் போர்டுகளைத் தூண்டி சுதேச வைத்தியத்தை ஆதரிக்கும்படி வேண்டி தங்கள் ஆயுள்வேத வைத்தியத்துக்கு பணவுதவி செய்ய டிபேபர்ட்டார் ஓட் கொடுக்கச் செய்கின்றனர். திராவிடர்க்கு ஆயுள் வேத வைத்தியமெனப்படுவது சமஸ்கிருத வைத்தியம, தமிழ் நாட்டுக்குப் பொருத்தமான தமிழ்ச் சித்தவைத்தியம்அன்று, என்று தெரியாமையால் ஆரியர் ஆயுள்வேத வைத்தியத்துக்கு கிராண்டு தாமுயலும் பொழுது திராவிடரும சேர்ந்து உதவி செய்கின்றனர்.

எல்லாவகையிலும் சிறந்ததும் உயர்ந்ததும் ஆயுளை வளர்த்தற்குரிய மருந்துகள் நிறைந்துள்ளதும தொன்று தொட்டிந்நாட்டில் வழங்கிவருவதும் உண்மையாயுள் வேதமுமான தமிழ்ச்சித்தவைத்தியத்தை வளர்த்தற்குப் பல தமிழ்ச்சித்தவைத்தியசாலைகள் ஏற்படுத்தற்கும் சித்த வைத்தியசாலைகளுக்கு துணைப்பொருள் [கிராண்ட்] தரவும், சித்த வைத்திய பாடசாலை வைக்கவும் போர்ட்டுகளிலும் முனிசிபாலிட்டிகளிலும் பொருட்டுணை செய்யும்படி நம் திராவிடர்கள் தாங்கள் ஓட் கொடுக்கும் காண்டிடேட்டுகளுக் கறிவிக்கவேண்டும். நமது கனம் மந்திரிகளும் நன்கு கவனிக்கவேண்டும்.

தமிழ் வைத்திய சங்கத்தில பட்டம் பெற்றவராயும், மெடல் பெற்றவராயும் தமிழ்ச்சித்த வைத்தியர் பலர் காத்துக்கொண்டிருக்க சம்ஸ்கிருத ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு முனிசிபாலிட்டிகளிலும் போர்ட்டுகளிலும் ஆயிரக்கணக்காய் ரூபாய் கொடுக்கின்றார்கள். தேச ஊழியஞ்செய்வதாய் பேர் தரித்துலாவும் ஆரியப்பிரமுகர்கள் பேச்சில் சமத்துவங்கூறுவது தவிர செயலில் தங்கள் இனத்தாருக்கும் சமஸ்கிருத பாஷைக்கும் சார்பாய்த் துணைபுரிவதிலேயே கருத்தாயிருக்கிறார்கள். அவர் வார்த்தைக்கு திராவிடரும் மயங்கிப் பின் செல்கின்றனர்.

சென்ற சென்சஸ் கணக்கின்படி இம்மாகாணத்தில் வைத்தியர் மொத்தம் 25815 பேர். அவர்களுள் தமிழ்ச் சித்த வைத்தியர் 20000-க்கு மேல் இருக்கின்றனர். வைத்திய நூல்கள் மிகுந்திருக்கின்றன. யோக முறைகளும் ஆயுளைவளர்க்கும் மருந்து முறைகளும், இரசமணி முறை

களும் தமிழ்ச்சித்த வைத்திய நூல்களிற்றுனிருக்கின்றன. ஆனால் தமிழ்ச் சித்தவைத்திய சாலைகள் பல்கக்காண்கிலம். அதற்கு மாறாய் சம்ஸ்கிருத ஆயுர்வேத வைத்தியசாலைகளே ஞாயமின்றிப் பல்கிவருகின்றன. ஆதலால் தமிழ் நாட்டிலுள்ள அரசர்களும், ஜமீன்தார்களும் செல்வவான்களும் வியாபாரிகளும், பண்ணையார்களும், டிஸ்டிரிக்ட்போர்டு மெம்பர்களும், தாலுகா போர்ட்டு மெம்பர்களும் முனிசிபல் கௌன்சிலர்களும் யூனியன் போர்டு மெம்பர்களும் தயவுசெய்து கவனித்துத் தமிழ்ச்சித்தவைத்தியத்தில் அபிமானம் வைத்து சித்தவைத்திய பாடசாலைகளும் கல்லூரிகளும் ஏற்படுத்தவும் ஆங்காங்கு தமிழ்ச்சித்த வைத்தியசாலைகளும் ஏற்படுத்தவும் அவற்றால் பொதுஜனங்களும் நோய் நீங்கிச் சுகமடையவும், செல்வவான்களும், படிப்பாளிகளும், அற்ப ஆயுளில் மரணமடைதலைத்தடுக்கவும் திருவருள் செய்யப்பன முறைவேண்டிக் கொள்கின்றனன் தமிழர்களே தமிழ்க்கனவான்களே திருவிடத் தலைவர்களே, தமிழ்ச் சித்தவைத்தியத்தில் மனம் வைத்து அதை யெங்கும் பரப்பும் தருமத்தை மேற்கொள்ள உங்களை இறைஞ்சுகின்றனன்.

இந்தச்சமயத்தை விட்டுவிடுவீர்களானால் உலகில் எல்லா நாட்டினும் உயிர்வுபெற்று விளங்கத்தக்க தமிழ்வைத்திய நூலும் தமிழர் பெருமையும் குன்றிப்போம். விழியுங்கள் விழியுங்கள்.

தமிழ் வைத்திய சங்க அமைச்சர்.

தமிழ்வைத்திய சங்கத்தின் ௨-வது மகாநாடு

கண்காட்சிகள் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள சௌந்தரியமால் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி சத்திரங்களில் 1923௵ ஆகஸ்ட்௴ 25, 26, 27, 28உ களில் நடைபெற்றன.

25—8—23 திருவன். திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் M. A. B. L., L. L. B., I. S. O. மதராசு சட்ட நிரூபணசபை, செக்ரட்டெரி, அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. திருவன். சர். பி, தியாகராய செட்டியாரவர்கள்- நைட், எம். எல். ஸி. மதராஸ் கார்போரேஷன் பிரசிடெண்டு பிள்ளையவர்களைத் தலைமைபூண வேண்டினர். திருவன். ராவ்பகதூர், டி வரதராஜலு நாயுடவர்கள் ரிட்டையர்ட்ஜட்சு. ஆதரித்தார்கள்.

௨. கடவுள் வணக்கமும் ராஜவாழ்த்தும் நிகழ்ந்தன.

3. வரவேற்புத் தலைவர் திருவள், ராவ்பகதூர் ஓ. தணிகாசலஞ் செட்டியாரவர்கள் பி. ஏ. பி. எல், எம். எல். சி. ஆங்கிலத்தில் வரவேற்புப் பெருஞ் சொல்லியற்றினர்.

4. அவைத்தலைவர் தமிழ்வைத்தியத்தைப் பாராட்டித் தமிழில் ஒருமுன்னுரைப் பெருஞ்சொல்லியற்றினர்.

5. அமைச்சர், வி சிவஞானயோகிகள் சங்க அறிக்கை அச்சியற்றிப் படித்தனர்.

6. பொருளாராய்ச்சிக் கூட்டத்துக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்: அவர்கள் (1) சாமி. வி. சிவஞானயோகிகள், 2) திரு. சி. த. ஆறுமுகம்பிள்ளையவர்கள், (3) திரு. ஆர். எஸ். பதி, அவர்கள் (4) A Z. M லட்டிபுடீன் சாயபவர்கள், (5) தேவி பண்டிட், கண்ணப்ப முதலியாரவர்கள் (6) மறைத்திருவள், சண்முகானந்த சாமிகள், (7) திரு. பண்டிட் எஸ். எல். ஆனந்தம் அவர்கள், (8) திரு. T. N. இராமலிங்கம்பிள்ளையவர்கள் (9) T. S. N. அப்பாவு மேஸ்திரியார், (10) எஸ். மாதசாமிபிள்ளையவர்கள், (11) திரு. என் வீரராகவப்பெருமாள் பிள்ளையவர்கள், (12) திரு. டி. சங்கரநாராயணப்பிள்ளையவர்கள், (13) S. A. வியோன வீரவர்மா அவர்கள், (14) வி. பி. ஏகாம்பர முதலியாரவர்கள், (15) சி. மதுரமுத்து முதலியாரவர்கள், (16) எஸ். கே. சுப்பையசாமிகள், (17) டாக்டர். லட்சுமிபதி பி. ஏ. எம். பி. சி. எம், (18) தி. மு. பெரியண்ணபண்டிதரவர்கள், (19) டாக்டர். சொக்கலிங்கம்பிள்ளையவர்கள், (20) கண்ணபிரான் முதலியாரவர்கள், (21) T. S முத்துக்கிருஷ்ணபிள்ளையவர்கள், (22) சக்கிரவர்த்திப் பண்டிதரவர்கள், (23) ஜெகந்நாத உபாத்தியாயவர்கள், (24) N. V. ஸ்ரீராமாச் சார்லுகாரு.

அவர்களுள் மருந்தாராய்ச்சித் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஷை உறுப்பினரில் 1. 3 5. 6. 7 8, 15. 17. 24. வது பெயர்கள்.

வரையுரை ஆராய்ச்சித் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1. 2. 3. 4. 6 7- 13. 20. 24—வது உறுப்பினர்.

26—8—23 காலையில் ஆனரபில் ஜஸ்டிஸ் மிஸ்டர், ராமேசம் பி. ஏ பி எல் அவர்கள் தலைமை பூண்டார்கள்,

1. அமைச்சர் வி சிவஞானயோகிகள் யோகக் கண்காட்சிபற்றி ஒரு பெருஞ்சொல்லியற்றினர்.

2. மறைத்திருவள் பிருந்தாவன யோகிகள் கைரோலி (குறித்தவேளையில் நினைவிழுந்துப்பீச்சல் காற்றை யிழுத்துவிடல்) கலையும், நூலம்பிகை யோகத்தையும் எல்லாரும் பார்க்கச் செய்து காட்டினர். சர்ஜன் ஜெனரல் அவர்கள் பெர்சவல அசில்டெனடு டாக்டர், கேப்டன் செருகாடி அவர்களும், டாக்டர் பண்டலே அவர்களும் அடுத்திருந்து பார்த்துப்

புகழ்ந்தனர். முதல் மந்திரி ஆனரபிள் பனகால் ராஜா அவர்கள், திவான் பகதூர் எல், ஏ, கோவிந்தராகவ அய்யர் அவர்கள் ராவ்பகதூர் டி, இரங்காச்சாரி அவர்கள் முதலியவர்களும் பார்த்து வியந்தனர்.

3, ஸ்ரீகன்னிகா பரமேசுவரிசத்திரத் திலிருந்த சித்த மருத்துவக் கண்காட்சியை ஜஸ்டீஸ் ராமேசம் சென்னை ஐக்கோர்ட் ஜட்ஜவர்கள் திறந்துவைத்து மிகப்பாராட்டிப் பேசினார்கள். அமைச்சர் வி. சிவஞான யோகிகள் சித்தவைத்திய கண்காட்சியின் அவசியத்தையும் கவர்ன்மெண்டாரும் தமிழ் நாட்டாரும் இவ் வைத்தியத்துக்கா தரவுசெய்ய வேண்டுமென்றும் பிரசங்கித்து, ஜஸ்டிஸ் ராமேசம் அவர்களுக்கும் பனகால் ராஜா அவர்களுக்கும் மற்ற கனவான்களுக்கும் பூமாலை சூட்டினர்.

4. தமிழ்ச் சித்தவைத்தியமகா மூலிகைகளில் தேவி பண்டிட் சி. சண்முகமுதலியாரவர்கள் ஜீவ சஞ்சீவி யென்ற கற்ப மூலிகை ஒன்று காட்சியில் வைத்தனர். அதை 25 ஆண்டுகட்குமுன் ஒரு நாசெல்லாம் $\frac{1}{32}$ படி நீரிற்போட்டுவைத்த அந்நீரை நாடோறும 12 ஆண்டு அருந்திவந்தால் காயசித்தியாமென்றொரு பெரியவர்தந்தனராம் அது சும்மாஇருந்தால் சுருங்கிவிடுகிறது, நீரிற்போட்டு வைத்தால் விரிந்து புதிதுபோலாகிறது, ஆண்டு 25 ஆகியும் பழயபடி நன்றாயிருக்கிறது. வி. சிவஞானயோகிகள் அம்மூலி ஊறிய நீரை 10 நாள் உட்கொண்டதில் மிக்கவலி தருந்தன்மையதிற்கண்டார். திருநெல்வேலி அ. சுண்டரியாபிள்ளையவர்கள் மயூர சிகை தாம்பிர சிகை இரண்டு பச்சிலைகளைக் காட்சிக்கனுப்பினார். ஒரு மனிதன் இரண்டு கையில் 2 உலக்கைகளை ஏந்திக்கொண்டிருக்கும்பொழுது மேடி மூலிகளை அவற்றினிடையிற் பிடித்தால் 2 உலக்கைகளும் ஒன்று ழிழுக்கப்பட்டுப் பொருந்துகின்றன. ஆதலால் அப்பச்சிலை இரண்டுஞ் சேர்ந்தபொழுது கவரும் காந்த சத்தியுண்டாகிறது. அதை ஆயிரக்கணக்கான பெயர்கள் வந்துபார்த்து இறும்பூ தெய்தினர்.

தமிழ்ச் சித்த வைத்தியக்கண்காட்சியாளர் 90 பெயர். ஆந்திர ஆயுள்வேதக் கண்காட்சியாளர் 1 ஆகக் காட்சியாளர் 91. சித்தவைத்திய மருந்துகள் பற்பம் செந்தூரம சுண்ணம் கட்டு இரசமணி இலேகியம் தைலம் முதலியன 1879. ஆந்திர ஆயுள்வேத மருந்துகள் கடைச்சரக்குகள் 120 சூரணம். ஆசவம், கிருதம், பானகம் ரசாயனம் ரசக்கிரியை லேபம், வடி, குக்குலு முதலியமருந்துகள் 113. பச்சிலைகள் 40, பற்ப செந்தூரங்கள் 21 ஆக 294. ஆகக் காட்சிக்கு வந்தமருந்துகள் 2173.

5. ஸ்ரீபிருந்தாவன யோகிகள் ஜஸ்டிஸ் ராமேசம் அவர்கள் ஓ. தணிகாசலஞ் செட்டியாரவர்கள் முதலியவர்களைப் புகைப்படம் பிடிக்கப்பட்டது. மாலை திவான்பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் தலைமையில்மகாநாடு கூடியது,

6. சென்னைதேவி பண்டிட் சி. கண்ணப்பமுதலியாரவர்கள் தமிழ்ச் சித்த மருத்துவம் பற்றியும்.

7. சீயாழி டி. எம். நாராயணசாமி ஐயர் பிரசவவைத்தியம் என்பதைப்பற்றியும்,

8. திருச்சி, டி. வி. சிங்காரம் பிள்ளையவர்கள் முக்தாது என்பது பற்றியும்,

9. மதுரை, வைத்தியபதி ஆர், எஸ், பதி அவர்கள் மக்கள் உடம்பின் இயல்பும் நீண்ட ஆயுளும் என்பதுபற்றியும்,

10. சென்னை பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் சித்தவைத்தியத்துக்கு அரசு பொது சனங்களின் ஆதரவு என்பதுபற்றியும்,

11. சென்னை, சண்முகானந்தசாமிகள் சித்தர் என்பதுபற்றியும் பெருஞ்சொல்லியற்றினர்.

27—8—23

1. மருந்தாராய்ச்சித்தலைவர் கூடிக் காட்சிக்குவந்த மருந்துகள் ஒவ்வொன்றையும் பார்த்து மருந்துகளின் எண்ணிக்கை, செய்முறை, குணம், மருந்து முடிக்கும் அமைதி, வெண்மை செம்மை முதலிய நிறங்கள் நெருப்பில் நிற்குந் தன்மை, உலோகச் சத்தின்றி நீறியிருக்குந்தன்மை, நோய் தீர்க்கும் வன்மை, மருந்துகளைப் புட்டிகளிலடைத்திருக்கும் நாகரீகம், லேபில்கள், நற்சாட்சிப்பத்திரங்கள், செய்தவர் அநுபவஞானம், படிப்பு முதலியவற்றைக் கவனித்து தருதிக்குத் தக்கபடி வெள்ளிப்பூ, பொற்பூ, பட்டம் நன்பதிப்புத்தாள் முதலியவற்றைக் கொடுக்கத் தீர்மானித்தார்கள். 15-வது உறுப்பினர் காலையில் வந்து போய்விட்டார்.

27—8—23 மாலையில் திவான் பகதூர் L. D. சாமிக் கண்ணும் பிள்ளையவர்கள் தலைமையில் சபை கூடியது.

2. திருச்சி T. N இராமலிங்கம்பிள்ளையவர்கள் சுண்ணம்பிலிருக்கிறது சூட்சம் என்ற பொருள்பற்றியும்,

3. திருச்சி இ. மு. பெரியண பண்டிதர் நாடி நிலையும் நலிவு சாரமும், என்பது பற்றியும்,

4. திருச்சி. A. M. Z. லட்டிபுடீன் சாயபவர்கள் சித்தவைத்தியமும் அதன் உண்மையும் என்பது பற்றியும்,

5. சென்னை டாக்டர், இலட்சுமிபதி B. A. M. B. C. M. அவர்கள் திராவிட தேச வைத்தியத்தை யறியும் பொருட்டு வட நாட்டிலுள்ள எல்லா இந்திய ஆயுர்வேத மகா நாட்டைத் தென்னிந்தியாவுக்கழைக்க வேண்டுமென்பதைப் பற்றியும்

6. சென்னைப் பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தமிழ்ச் சித்த வைத்தியமென்பது பற்றியும்.

7. மதுரை. மந்திரமூர்த்தி இராமசாமி ஐயர் சித்த வைத்தியப் பெருமை பற்றியும்,

8. கோட்டாறு. டி. சங்கரதாணுப்பிள்ளை யவர்கள் இந்திய வைத்தியம் என்ற பொருள் பற்றியும்,

9. சென்னை சக்கிரவர்த்திப் பண்டிதர், இரண வைத்தியம் பற்றியும்,

10. மணப்பாடு எஸ். ஏ. வியோன் வீரவர்மா அகத்தியரின் அரும் புதைடல் என்பதைப் பற்றியும் பெருஞ் சொல்லியற்றினர்.

28—8—23

காலைமுதல் வரையுரை ஆராய்ச்சிக் கூட்டங்கூடி 12 மணி வரை நடைபெற்றது. 13. 20வது உறுப்பினர் வரவில்லை. வரையுரையாளர்களுக்கும் பிரசங்கிகளுக்கும் அவற்றின் அருமை பெருமைவன்மைகளுக்குத்தக்கபடி நன்மதிப்புத்தாள் பட்டம் வெள்ளிப்பூ பொற்பூக்கள் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

பெருஞ்சொற்கள் நிகழ்த்தியவர் 16 பெயர்

வரையுரை யெழுதியவர்கள் 35 பெயர்

பட்டபபரிசு பெற்றவர்கள்.

வைத்தியப் பெயராசிரியர்	1
வைத்தியாசிரியர்	6
வைத்திய பூபதி	10
வைத்தியபதி	34
நன்மதிப்புததாள்	10
ஆக	61

கண்காட்சியிற் பரிசு பெற்றவர்

பொற்பூக்கள்	44
வெள்ளிப்பூக்கள்	26
நன்மதிப்புத்தாள்.	20
ஆக	90
ஆக இருவகைப் பரிசுகள்	151

தமிழ்வைத்திய சங்கவைத்திய பாடசாலையிற் படித்து பரீக்ஷையிற் தேறித் து வைத்தியன் என்ற பட்டம் பெற்றவர்கள் 7 ஆகப் பரிசுபெற்றவர் 158.

28—8—23 மாலையில் திருவன் எஸ். சோமசுந்திரம் பிள்ளையவர்கள் பி.எ., பி.எல்., எம்., எல்., சி., அவர்கள் தலைமையில் அவைகூடி அடியிற்கண்ட பெருஞ்சொற்கள் நிகழ்ந்தன.

---

1. எட்டயபுரம், வெங்கட்டராமவாஜபேயலு H. L. M. S. அவர்கள் சித்தர் நூலின் பரிபாஷைகள் என்பதுபற்றியும்,

2. பழனி, ஊர், எம். கே. வேலுச்சாமிபிள்ளையவர்கள் மூப்பு என்பது பற்றியும்,

3. சென்னை, சண்முகாநந்த சாமிகள் சித்தர் நூற் பெருமையைப் பற்றியும்,

4. சென்னை, சி. த. ஆறுமுகம்பிள்ளையவர்கள் தமிழ்ச்சித்த மருந்துகளின் பெருமை என்பதுபற்றியும்,

பெருஞ்சொல்லியற்றினூர்கள் ஆசப்பிரசங்கம் 20.

பரிசளிப்பு

மதராஸ்கவர்ன்மெண்ட் கௌன்ஸில்'எக்ஸிகியூ மெம்பர், ஆனரபில், சர், மகமத் அபிபுல்லா சாகிபு பகதூர் நைட், கே ஐ இ. அவர்கள் தலைமைபூண்டு.

திருநெல்வேலியில் நடந்த முதலாவது மகாநாடு கண்காட்சிகளில் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்ட பொற்பூ, வெள்ளிப் பூக்களையும், கொடுக்காது பாக்கியிருந்த பட்டங்களையும், இரண்டாவது மகாநாட்டில் கண்காட்சி வனையுரை பிரசங்கங்களுக்குக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்ட பொற்பூ, வெள்ளிப்பூ, பட்டங்கள் நன்மதிப்புத்தாள்களுக்குரிய பட்டயங்களையும் மிக அன்போடு வாழ்த்திக்கொடுத்து, தமிழ்ச் சித்த வைத்தியர்களே? உங்களுக்கு இவ்வைத்தியத்திலுள்ள திறமையை மெச்சி மெடல்களும், பட்டங்களும், நன்மதிப்புத்தாள்களும் கொடுக்கப்பட்டன. இதன்மூலமாய்ப் பொதுஜனங்களுக்குப் பல நன்மைகளை நீங்கள் செய்ய வேண்டும் பொறுப்பு உங்கள்பேரிற் சுமத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் ஜனங்களின் நோய்களைத் தீர்த்து நன்மைசெய்தால் உங்களுக்கு மேன்மையும் நன்மையும் செல்வமும் தெய்வ இருவையுமுண்டாகும் என்றாசீர்வதித்தார், அமைச்சர் யோகிகள் அவர்கள் செய்தவற்றுக்கு நன்றிகூறிப பூமாலை சூட்டினர்.

தலைவர் திருவன் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் தமிழ் வைத்திய சங்கத்தாரால் சென்னையில் நடத்தப்பெற்றுவந்த வைத்திய பாடசாலை மாணாக்கர் எழுவருக்கு வைத்தியர் என்ற பட்டப் பட்டயமும், அப்பாடசாலை ஆசிரியர் திருவன் பூ. முருகேசநாயகர் அவர்களுக்கு வைத்தியாசிரியர் பட்டப் பட்டயமுமளித்தனர்.

சென்னைச் சௌந்தரியமாலில் கூடிய தமிழ் வைத்திய சங்க 2-வது மகாநாடு கண்காட்சியில்

திவான் பகதூர் திருவன். L. D. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள்
M. A., B. L, L. L. B, I. S. O.,

சென்னைச் சட்டசபைச் செக்ரட்டெரி தலைமையில்

1923-ஆண்டு ஆகஸ்டு மீ 28உ நிறைவேறிய தீர்மானங்கள்.

1. சென்னைச் சுதேச வைத்தியக் கமிட்டியார் நாட்டு வைத்தியத்துக்கு ஆண்டு 1-க்கு 5-லக்ஷம் ரூபாய் உதவிசெய்ய வேண்டுமென்று

17—2—23ல் சிபார்சு செய்திருக்கிறார்கள். அது நாட்டுவைத்தியத்துக்குத் துணைசெய்ய மிகக் குறைந்த தொகையாயிருந்தும் அந்தத் தொகையும் இதுவரை கொடுக்கப்படவில்லை. ஆதலால் அந்தத் தொகையை உடனே கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய மதராஸ் லெஜிஸ்லேட்டிவ் கௌன்ஸிலையும் மதராஸ் கவர்ன்மெண்டையும் இம்மகாநாடு வேண்டிக்கொள்கின்றது.

2. தமிழ்ச் சித்தவைத்தியம் உயர்ந்த மருந்து முறைகளையும் கருத்துகளையும் உடைய உயர்ந்த நூல்களை உடைத்தாயிருப்பதால் அதைப் பலருக்கும் பயன்படச்செய்ய பாப்புவசகுப்ற் பல ஜில்லா நகரங்களிலும் தாலுகா நகரங்களிலும், தமிழ் வைத்திய பாடசாலைகள் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படவேண்டும். அல்லது பொதுஜனங்களால் வைத்திய பாடசாலைகள் வைக்கப்பட்டால் அவற்றிற்கு கிராண்டு கொடுக்கவேண்டும்.

3. சென்னை ராஜதானியில் தமிழ் ஜில்லாக்களிலுள்ள டிஸ்டிரிக்ட்டுபோர்டு, தாலுகா போர்டு, முனிசிபாலிடி, யூனியன் போர்டுகள் அவற்றின் பண்டுகளிலிருந்து தமிழ்ச் சித்தவைத்தியசாலை ஏற்படுத்த வேண்டும். அந்த வைத்திய சாலைகளுக்குத் வைத்தியர்களை நியமிக்கும் பொழுது தமிழ் வைத்திய சங்கத்தலைவருக்கு தெரிவித்து ஷை சங்க மகாநாட்டில் பட்டம் பெற்றவர்களில் ஷை சங்கத்தாரால் சிபார்சு செய்யப்படுகிறவர்களையே வைத்தியர்களாக நியமிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

4. சென்ற சென்சஸ் கணக்கின்படி சென்னை ராஜதானியிலுள்ள வைத்தியர்கள் 25815-ல் ஆங்கில வைத்தியர் சம்ஸ்கிருத வைத்தியர் யூனானி வைத்தியர்போக திராவிட வைத்தியமெனும் தமிழ்ச்சித்த வைத்தியர் சுமார் 20000 பேரிருக்கின்றனர். இவர்கள் தாம் ஜனத்தொகையில் பெரும்பகுதிக்கு வைத்திய உதவி செய்து வருகின்றனர். ஆதலால் திராவிட வைத்தியமாகிய தமிழ்ச் சித்த வைத்தியத்தை வளர்த்தற்கு கவர்ன்மெண்டார் பெரும்பகுதியாகிய தொகையைக் கொடுத்துதவல் வேண்டும்.

5. சென்னை ராஜதானியில் ஆங்கில வைத்திய சாலையில் ஒரு நாளைக்கு ஆள் 1-க்கு அணா 3-முதல் 6-வரை செலவாகிறது. தமிழ்ச் சித்த வைத்தியசாலையில் நாள் 1-க்கு ஆள் 1-க்கு 7 பை செலவாகிறது. பெரும் அளவில் செய்தால் 6 பையில் அடங்கும். இத்தமிழ்ச் சித்த வைத்திய மருந்துகளால் பிறவைத்தியங்களில் தீராத குட்டம், வாதநோய் மேகப்புண், குன்மம் முதலிய பெருநோய்களும் தீர்ந்துவருகின்றன. ஆங்கிலேய வைத்தியசாலை 1-க்கு பிடிக்கும் செலவில் தமிழ்ச் சித்த வைத்தியசாலைகள் 6-முதல் 10-வரை வைத்து நடத்தலாம். அப்படிச்

செய்வதால் ஜனங்களின் பெரும்பகுதியார்க்கு வைத்திய உதவி எளிதிற் கிடைக்கும். ஆதலால் தமிழ்ச் சித்த வைத்தியத்தை வளர்ப்பதற்கு கெவர்மெண்டாரும் டிஸ்டிரிக்ட்டு போர்டும் தாலுகா போர்டு, முனிசிப்பாலிடி யூனியன் போர்டுகளும் இந்தத் தமிழ் வைத்திய சங்கத்துக்குப் பொருட்டுணை செய்யும்படி இம்மகாநாடு வேண்டிக்கொள்கின்றது.

6. நாட்டு வைத்தியத்தை வளர்க்க கெவர்ன்மெண்டார் பாடசாலை வைத்தியசாலைகள் ஏற்படுத்தும்பொழுது தமிழ்ச் சித்த வைத்தியம சமஸ்கிருத ஆயுள்வேத வைத்தியம், யூனானி வைத்தியம் இவற்றிற்குரிய பாடசாலை, வைத்திய சாலைகளைக் கண்காணிப்போர் ஒருவராகவேயிருத்தல் கூடாது. அவ்வவ்வவற்றிற்கு வெவ்வேறு கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்கவேண்டும். தமிழ்ச் சித்த வைத்தியத்தினைக் கண்காணிப்போர் தமிழராகவேயிருத்தல்வேண்டும். பிற வைத்தியர்களையும் பிறவகுப்பினர்களையும் நியமித்தால் தமிழ்ச் சித்த வைத்தியத்துக்குப் பலதீங்குகள் நேரும், இதனைக் கெவர்னமெண்டார் கவனித்து நடத்தும்படி இம்மகாநாடு வற்புறுத்துகின்றது.

7. தமிழ்ச் சித்த வைத்தியத்துக்கு வெள்ளை கெளரி. வீரம் முதலிய பாடாணங்களும் அபின், கஞ்சா முதலியவைகளும் மருந்துகளுக்கு அடிக்கடி அவசியம் வேண்டியிருப்பதால் சித்த வைத்தியர்கள பாடாணங்கள் 10-அவுன்ஸ் வரையும், அபின் கஞ்சா முதலியவைகள் 10-தோலாவரையும் வாங்கி வைத்துக்கொள்ளும்படி சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

8. தமிழ்ச் சித்த வைத்திய மருந்துகளுக்கு பெரும்பாலும் பாடாணங்கள் வேண்டியிருக்கின்றன. முன்னர் அச்சரக்குகள் இந்நாட்டிலேயே வைப்பு வைக்கப்பட்டு வந்தது. பின்னர் பிறநாடுகளில் தயாரிக்கப்பட்டுவந்தது. இப்பொழுது அச்சரக்குக்ள் வெளிநாடுகளிலிருந்து வருவது மிகக்குறைந்து வருகிறது. ஆதலால் பாடாணங்களை வைப்பு வைக்கவும் விற்கவும் தமிழச் சித்த வைத்தியர்களுக்கு லைசென்ஸ் கொடுக்க இம் மகாநாடு வேண்டுகிறது.

எல்லாக் கடிதங்களும் அமைச்சர்,
தமிழ்வைத்திய சங்கம்
கோவிற்பட்டிக் கனுப்பவேண்டும்.

L. D. SWAMIKANU,
பிரசிடெண்ட்டு.

தமிழ்ச் சித்த வைத்தியசாலை ஏற்படுத்துவதற்குத் தமிழ் வைத்திய சங்கத்தார் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புகள்

1. நூற்றுக்கணக்கான ஆண்டிருக்கினும் கெடாத பற்ப செந்தூரங்களும் உயர்ந்ததும் குற்றமற்றதும் மிக அநுபவமானதும் நல் முறைப்

படி செய்யப்பட்ட தமான சூரணம், இலேகியம், எண்ணெய் முதலிய மருந்துகளும் கொடுக்கப்படும்.

2. எல்லா நோய்களுக்கும் நோய்களுக்குத்தக்க அளவுப்படி 2000 வேளைக்குக்குத்தகையாக ரூபாய் 31—4—0க்கு மருந்து. தீர்க்கும் நோய்கள் அளவு படவை, விபரத்துடன் அனுப்பப்படும் 1மீ முன்னர் உத்தரவின் பேரில் முடித்துக்கொடுக்கப்படும்.

3. சங்கத்திற பட்டம் மெடல் பெற்ற வைத்தியர் மாதம் 1-க்கு ரூ. 35—5—100 சம்பளம். வீட்டிற்குப் போய்ப் பார்வையிட பார்வை 1-க்கு ரூ. 1—ல் பாதி வைத்தியருக்குக் கொடுக்கும் ஏற்பாட்டுடன அனுப்பித் தரப்படும்.

4. மருந்தியவேலை—15—25 ரூ வரை சம்பளம மருந்து செய் முறை படித்துத் தேர்ந்தோன் அனுப்பப்படுவன.

தமிழ் வைத்திய சங்கத் தலைவர்

திருமன், R. அப்பாசாமி நாயுடு காரு, ஜமீன்தார்

இள வரசனேந்தல்

இரண்டாவது மகாநாட்டுத் தலைவர்

திருவன், திவான்பகதூர L. D சாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள்,

M, A. B. L. L. L. B. I. S. O. சென்னை,

காட்சித் தலைவர்

திருவன். ஜஸ்டீஸ் ராமேசம் B. A., B. L.

பட்டம் மெடல் பரிசருள் தலைவர்

திருவன். ஹானரபிள் சா. மகமத் அபிபுல்லாசாயபு பகதூர், அவர்கள் நைட் சிஐ. இ

காப்பாளர்

1. ஸ்ரீலஸ்ரீ திருவாடுதுறை ஆதீனம்பண்டாரச் சந்நிதிகள்
2. ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதினம் பண்டாரச்சந்நிதிகள்
3. திருவன். சர். பி. தியாகராயாசெட்டியாரவாகள் நைட். எம். எல். சி.
4. திருவன். M. C .T. முத்தையசெட்டியாரவர்கள் எம். எல். சி.

காரியதரிசி காத்தான்

அமைச்சர் சாமி, விருதை, சிவஞான யோகிகள் கோவிற்பட்டி

எல்லா விபரங்களுக்கும அமைச்சருக்கெழுதவேண்டும்.

(இன்னும்வரும்)

Travancore Swadeshi Cod Liver Oil

திருவிதாங்கூர் காட்லிவர் ஆயில் என்ற

மச்சாமிர்த நெய்

இது திருவாங்கூர் சமஸ்தான மகாராஜா அவர்களின் வைத்தியசாலையிலிருந்த 8 வருஷகாலம் ஆயுர்வேத வைத்தியராகவும் குமார திருவிதாங்கூர் சமஸ்தானத்து கான்ட்ராக்ட் டிபார்ட்மெண்டில் வருஷகாலம் சர்விஸிலிருந்து பென்ஷன் வாங்குகிற இராமசுவாமி பிள்ளையால் சுத்தி புத்தி அனுபவத்தால் மருந்து சாஸ்திர விதிப்படி மூலிகைகளால் தயார் செய்யப்பட்டது. மருந்து சாப்பிடுகால பத்தியமில்லை.

மருந்தின் குணம்:—க்ஷயம், காசம், இளைப்பு; மார்தம், சோகை, விக்கல், மூர்ச்சை விடாசுரம் சீதபேதி இரத்தபேதி அன்னத்துவேஷம் கர்ப்பமான மாதர்களை கர்ப்பசைவு, கர்ப்பஸ்ராவம், பித்தசலேட்டை, மேகவாட்டு, கிராணி, வயிர்வாதங்கள், குழந்தைகளுக்கு உண்டாகும் தலைசுற்றல்; தேகபலவீனம், திமிர், பூச்சிகள் உண்டாதல், இரத்தக்குறைவு, இருமல், மார்கூடு கட்டுதல், நாவறலுதல், நீர் இறக்கம் முதலான பதினெட்டு முதலிய வியாதிகள் எல்லாவற்றையும் குணமாக்கும்.

விலை 6 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு ரூ. 1—4—0
12 „ „ —[illegible]—0

50 ரூபாய்க்குமேல் ஒரு தடவையில் வாங்குபவர்களுக்கு விசேஷ கமிஷன் கொடுக்கப்படும்.

இன்னும் இதைப்போன்ற தேவாமிர்தம் முதலான தைலங்களும் லேகியம், பஸ்பம், செந்தூரம், குழம்பு, எண்ணெய், குளிகை சூரணம் முதலானவைகளும் இங்கு விற்கப்படும்.

இதனடியிற் கண்ட விலாசதாரிடம் வி. பி. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்:

சோல் ஏஜெண்டின் விலாசம்.

வி. இராமசாமிபிள்ளை

சண்முகானந்த தமிழ் ஆயுர்வேத வைத்தியசாலை, வீரநாராயணமங்கலம்,
தெட்டிவிளை போஸ்ட், தாழக்குடி, திருவாங்கூர்.

ஓம்

மகானால் கிடைத்த

அருமையான மூலிகையும், தாயத்தும்

குஷ்டம், க்ஷயம் மூலம், கிராணி, பிரமை வைத்தியம், ஜுரப்பு, வலிப்பு மூத்திர வியாதி முதல் சொல்லப்பட்ட சகல வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷ வியாதி செய்வினை என்று சொல்லப்பட்ட பலவித கட்டுகளும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும். ஏராளமான நற்சாட்சி பத்திரங்களைக் காணலாம்.

புத்திரபாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள் உலகப்பிரசித்தி பெற்றவை. எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் புஸ்தகமும் இனாமாய் கிடைக்கும். எந்த தேசத்துக்கும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு நேரிலாகவேனும் பேசிக்கொள்ளப்படும்.

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ்,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா,
சவுத் இந்தியா

தமிழகவொழுகு என்ற பழந்[illegible]க்கட் சட்டம்.

இது தமிழ் நாட்டின் பழைய ஒழுக்கவிழுக்கங்களை நன்குவிளக்கும். பழந்தமிழ் நூல் சுதஅா அடிகளுடைய முற்பகுதி.

விலை ரூ 1. வி. பி. யிற் பெற்றுக்கொள்ளலாம்.

த. ஆறுமுகநயினார்பிள்ளை,
மெய்கண்டானம்பலம், பேட்டை P.O., திருநெல்வேலி.

படிக்கவேண்டிய புத்தகங்கள்.

1.	விபூதிருத்திராக்ஷதாரண நிருபணம் அட்டை பைண்டு	0	14	0
	காலிகோ பைண்டு	1	2	0
2.	தேவோபாசனா தீபம்—தெய்வத்தை வழிபடும் வகைகளையும் யோகத்தையும் விளக்கும் நூல்	0	8	0
3.	திருவிடர் கழகம் தமிழ்மொழிபற்றிய பிரசங்கம்	0	2	0

வி. பி யிலனுப்பப்படும்.—வி. சிவஞானயோகி, கோவில்பட்டி.

திராவிடன்

தமிழ்நாட்டார் முன்னேற்றமடைவதற்காக வெளிவருவதாவும் தினசரிப் பத்திரிகை.

இதில் தமிழர்தொன்மையும் மேன்மையும் தமிழின் பெருமையும் உலகச் செய்திகளும், பற்பல நாட்டின் புதினங்களும், தமிழர் முன்னேற்றமடையும் வழிகளும், அறிவு வளர்ச்சிக்குரிய பல செய்திகளும் பல அறிஞர்களாலெழுதப்பட்டுவருகின்றன. தமிழர் தங்களுக்குரிய திராவிடன் பத்திரிகைக்குச் சந்தாதாரராதலோடு தமது நண்பர்களையுஞ் சந்தாதாரராகத் தூண்டுதல் பெரியதோர் தருமமாம்.

சந்தா—வெளியூர் மாதம் 1-க்கு	...	2	0	0
3 மாதத்துக்கு	...	6	0	0
6 மாதத்துக்கு	...	11	4	0
12 மாதத்துக்கு	...	22	0	0

மானேஜர், திராவிடன், எக்மோர், சென்னை விலாசத்துக்கெழுதுக.

வி. சிவஞானயோகி, அமைச்சர்.

1924—வருஷத்தின் 8 அணா விலையுள்ள காலண்டர் கேட்லாக் இனாம்.

தங்கள் விலாசத்தை தெரிவித்தவர்க்கு இனாமாகவே அனுப்புவோம்
A. E. முஹையத்தீன் மெடிகீகல்ஹால் வலங்கைமான், தஞ்சைஜில்லா.
ஆர்டர் செய்யும்போது தமிழ் வைத்தியம் என்ற பத்திரிகையில் கண்டதாக எழுதவும்.

The Palamcotta Printing Press—1924.